வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 06 17.08.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 229 பக்கங்கள் : 16




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# பாதிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இலங்கையில் உணவை குறைத்தன!

## பொருளாதார நெருக்கடியே காரணம் என்கிறது ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம்

கொழும்பு, ஓக. 17

**பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் பாதிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உணவைத் தவிர்ப்பது, குறைவான உணவை உண்பது அல்லது உணவின் அளவு குறைத்தல் போன்ற சமாளிக்கும் உத்திகளை நோக்கித் திரும்பியுள்ளன என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.**

மேலும் 27 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள் கடுமையான உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


உலக உணவுத் திட்டத்தை மேற்கோள் காட்டி குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஐந்து வயதுக்குட்பட்ட எடை குறைந்த குழந்தைகளில் ஊட்டச்சத்து குறைபாடு 12.2 சதவீதத்திலிருந்து 17 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இலங்கையில் வறுமை விகிதம் 24.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது 2019 ஆம் ஆண்டை விட இரண்டு மடங்கு அதிகம். 2021 மற்றும் 2024 இற்கு இடையில் உணவு விலைகள் இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளன. பொருளாதார மீட்சி இருந்தபோதிலும், வேலைவாய்ப்பு மற்றும் உண்மையான ஊதியங்கள் நெருக்கடிக்கு முந்தைய நிலைகளுக்குக் கீழே உள்ளன. இதன் விளைவாக வறுமை மற்றும் உணவுப் பாதுகாப்பின்மை அதிகரித்ததுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் உள்ள

15



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 19ஆம் திருவிழாவான நேற்று மாலை கார்த்திகை உற்சவம் நடைபெற்றது. முத்துச் சப்பரத்தில் முருகப் பெருமான் வள்ளி - தெய்வானையுடன் எழுந்தருளியபோது... (படம் : ஐ.சிவசாந்தன்)

# சலுகைகளை பெற்றுக்கொள்ள நீதிமன்று செல்லமாட்டார் ரணில்

கொழும்பு, ஓக. 17

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சிறப்பு சலுகைகளை மீளப் பெற்றுக்கொண்டமைக்கு எதிராக எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி ரணில்

15

# மன்னார் காற்றாலை திட்ட நிலங்கள் இனிமேல் புதிய முதலீட்டாளர்களுக்கு!

கொழும்பு, ஓக. 17

மன்னார் காற்றாலை மின் திட்டத்திற்காக இந்திய அதானி நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலங்களுக்கான ஒப்பந்தங்களை மீண்டும் அழைத்துப் புதிய முதலீட்டாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக் கொடி கூறுகிறார்.

மன்னாரில் மின் உற்பத்தி தொடர்பாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கட்டுமானத்திற்காக செலவழித்த ஆரம்பத் தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு அதானி நிறுவனம் அரசாங்கத்திடம் கோரியுள்ளதாக

15

# இலங்கை குறித்த தீர்மானத்தை ஜெனீவாவில் புதுப்பிக்கவேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 17

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான தற்போதைய தீர்மானம் புதுப்பிக்கப்படவேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியத்துக்கான பிரதி பணிப்பாளர் மீனாட்சி கங்குலி விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் அலுவலக

15

# ஜனாதிபதி வேட்பாளராக மீண்டும் களமிறங்குவேன்!

## எதிர்க்கட்சிகளிடம் கூறினார் சஜித்

கொழும்பு, ஓக. 17

மீண்டுமொரு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுமாயின் அப்போதும், தாமே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க போவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் சிறுபான்மை பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையே

15

# யாழில் மின்சாரம் தாக்கி 17 வயது இளைஞன் மரணம்!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ்ப்பாணம் - ஆறுகால்மடம் பகுதியில் நேற்று மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். சங்கரத்தை - துணவி பகுதியைச் சேர்ந்த அருள்ஜீவன் பிரசாத் (வயது 17) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

குறித்து இளைஞன் ஆறுகால்மடம் பகுதியில் உள்ள வாகன சேவிஸ் நிலையத்தில் பணிபுரிந்து வருகின்றார். பணிபுரியும்போது அவர் மீது

15

# அரச அலுவலர்களில் பலருக்கு துணிந்து முடிவெடுக்க பயம்!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஓக. 17

"எங்கள் அரச அலுவலர்களில் பலர் எல்லாவற்றுக்கும் பயந்து, துணிந்து முடிவெடுத்துச் செயற்பட முடியாதவர்களாக அல்லது ஊக்கமில்லாதவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள், இந்தப் பெண் சாதனையாளர்களின் அனுபவப்பகிர்வுகளைக் கேட்டு அவர்களின் துணிவு - பல தடைகளைத்தாண்டி சாதிக்கும் ஆற்றல் என்பவற்றை தெரிந்து கொள்ளவேண்டும்."

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.

15

# நம்பிக்கையில்லா பிரேரணை நிச்சயம் தோற்கடிக்கப்படும்!

## பிரதியமைச்சர் சுனில் குமார கமகே

கொழும்பு, ஓக. 17

பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்படும் என விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார பிரதியமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்துள்ளார்.

மாதிவெல - பிரகதிபுர பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக் கொண்டதன் பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்துக்கு எத்தகைய நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தாலும், நாங்கள்

15

# மகிந்தவின் அறிவுரை கேட்காததால் ஆட்சி கவிழ்க்கப்பட்டார் கோட்டாபய!

## முன்னாள் அமைச்சர் டயானா கமகே

கொழும்பு, ஓக. 17

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவரின் ஆட்சிக் காலத்தில் அவரது சகோதரர் மகிந்த ராஜபக்ஷவின் அறிவுரைகளை கூட கேட்காததாலேயே ஆட்சி கவிழ்க்கப்பட்டார் என முன்னாள் அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

15

# அரச ஊழியர் சம்பள உயர்வு; வாக்குறுதி வழங்கமுடியாது

## கைவிரிக்கிறது அநுர அரசு

கொழும்பு, ஓக. 17

அரச ஊழிர்களுக்கான சம்பள உயர்வு எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் அதிகரிப்படுவது தொடர்பில் வாக்குறுதி வழங்க முடியாது என கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 19ஆம் திருவிழாவான நேற்று காலை சூர்யோற்சவம் நடைபெற்றது. காலை 6.45 மணிக்கு இடம்பெற்ற வசந்தமண்டப பூஜையை அடுத்து ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் எழுந்தருளிய சூரியபகவான் உள் வீதியுலா வந்ததைத் தொடர்ந்து வெளி வீதியுலாவும் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். (படங்கள் : ஐ.சிவசாந்தன்)

# வனவளத் திணைக்களத்தால் அச்ச நிலையில் விவசாயிகள்

வவுனியா, ஓக. 17

**வனவளத் திணைக்களத்தின் அண்மைய செயல்பாடுகளால் விவசாயிகள் அச்ச நிலையில் உள்ளதாக வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் எஸ். பிரான்சிஸ் தெரிவித்தார்.**

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"வனவளத் திணைக்களத்தால் எல்லையிடப்பட்ட காணிகள் விடுவிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்தாலும் வவுனியாவை பொறுத்தவரை அவ்வாறு எந்தக்காணியும் விடுவிக்கப்படவில்லை என்றே கூறவேண்டும்.

அத்துடன் நீண்டகாலமாக பராமரிக்கப்படாத காணிகள் இனிமேல் மக்களுக்கு கிடைக்காது என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனால், பொதுமக்கள் காடுகளாக இருக்கும் தமது காணிகளைத் துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். வனவளத் திணைக்களம் அந்தப் பணியை செய்யத் தடைபோடுகின்றது. அவ்வாறு செய்பவர்களையும் கைது செய்கின்றது.

இந்த நிலை தொடர்ந்தால் எவ்வாறு மக்கள் தமது காணிகளைத் துப்புரவாக்குவது. இதனால், விவசாயிகளும் மக்களும் அச்ச நிலையில் உள்ளனர். இதற்கு ஒரு நீதியான தீர்வை அரசு வழங்க வேண்டும். சில காணிகளுக்குள் கிணறுகள் உள்ளன. அவ்வாறான காணிகளையும் துப்புரவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

30 வருடங்களாக இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் தமது சொந்த இடங்களுக்கு மீளத்திரும்பவில்லை. அவர்களது வீடுகளை மூடி காடுகள் வளர்ந்துள்ளன.

அந்தக் காணிகள் தொடர்பாக கிராம அலுவலர்கள் உறுதிப்படுத்தி கடிதம் வழங்கினாலும் வனவளத்திணைக்களம் அதனை ஏற்க மறுக்கின்றது.

பலர் காணிகளுக்கான அனுமதிப்பத்திரத்தையும் வைத்துள்ளனர். ஆனால், அது செல்லுபடியாகாது என்று கூறுகின்றனர். இதனால், விவசாயிகளின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இதற்கு அரசாங்கம் நல்லதொரு தீர்வை வழங்க வேண்டும்"- என்றார். (எ-10)

# உலக முயற்சியாளர் தினம்: வவுனியாவில் நடைபவனி



வவுனியா, ஓக. 17

உலக முயற்சியாளர் தினத்தை முன்னிட்டு வவுனியா பல்கலைக் கழகத்தின் முயற்சியாண்மை கற்கைகள் பிரிவின் மாணவர்கள் இணைந்து நேற்று விழிப்புணர்வு நடைபவனி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

முயற்சியாளர்களின் பொருளாதார மேம்பாடு இலங்கைக்கு முக்கியமான ஒரு விடயமாக கருத்தில் கொண்டு உலக முயற்சியாளர் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாகவும் எதிர்வரும் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் வவுனியா பல்கலைக்கழகத்தில் புத்தாக்கம், வர்த்தக கண்காட்சி மற்றும் வர்த்தக செயல்பாடுகள் தொடர்பான கருத்தரங்குகளும் இடம்பெறுகின்ற நிலையிலேயே இந்த விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் பூங்கா வீதியில் உள்ள வெளிவாரிகள் கற்கைகள் பிரிவில் இருந்து ஆரம்பமான நடைபவனி வவுனியா நகர் வழியாக சென்று மீண்டும் வெளிவாரி கற்கைகள் பீடத்தை வந்தடைந்தது. இதில், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அ. அற்புதராஜா, வியாபாரக் கற்கைகள் பீட விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.(எ-10)

# ஹர்த்தாலை தமிழர்கள் புறக்கணிக்க வேண்டும்

## சிவசேனை தலைவர் மீண்டும் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 17

தோல்வியில் முடிந்த தமிழ் மக்களது போராட்டத்திலிருந்து மீண்டுவரும் பொருளாதார நகர்வுகளை மீட்டெடுக்கும் இன்றைய காலகட்டத்தில் ஹர்த்தால் உள்ளிட்ட போராட்டங்கள் அவசியமற்றது என சிவசேனை அமைப்பின் தலைவர் க. சச்சிதானந்தம் தெரிவித்தார்.

நாளை 18 ஆம் திகதி வலிந்து அழைக்கப்பட்டுள்ள ஹர்த்தாலை சைவர்களும் தமிழ் மக்களும் புறக்கணிக்க வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில்,

"தற்போது அழைப்பு விடுக்கப்பட்ட கடையடைப்பு போராட்டம் என்பது கடைந்தெடுத்த கயவர்கள் விடுத்துள்ள அழைப்பு. இதை சைவர்கள் குறிப்பாக தமிழர்கள் புறக்கணிக்க வேண்டும்.

கடையடைப்புக்கான தேவை இன்றைய சூழலுக்கு தேவையற்ற ஒன்று. அத்துடன் கடையடைப்பு என்பது காலத்துக்கும் ஒவ்வாத போராட்டம்.

முல்லைத்தீவில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்த சம்பவத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் பிரசன்னம் என்பது தோல்வியடைந்த இனம் சந்திக்கும் ஓர் இயல்பான தாக்கம். அல்லது அடக்கு முறை தான்.

மடு மாதாவின் திருவிழாவை முன்னிட்டு போராட்டத்தை பின்நகர்த்திய குறித்த தரப்பினர் நல்லூர் திருவிழாவை குறிவைத்து

கடையடைப்பு எனக்கூறி சுயநல அரசியல் இலாபம் தேட முயற்சிப்பதால் நாளாந்தம் உழைத்து வாழும் மக்களின் வாழ்வே பாதிக்கும்.

அந்தவகையில் ஏழை மக்களை பகடைக்காயாக்க முயற்சிக்கும் நரித்தன அரசியலுக்கு இடம்கொடுக்கக்கூடாது.

இந்தக் கடையடைப்பு போராட்டத்துக்கு வர்த்தகர்களோ, போக்குவரத்து சார் சங்கங்களோ, பொது அமைப்புகளோ எதுவானாலும் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது.

தோல்வியில் முடிந்த போராட்டத்திலிருந்தி மீண்டு வரும் பொருளாதார நகர்வுகளை மீட்டெடுக்கும் காலத்தில் இந்தப் போராட்டங்கள் அவசியமற்றவை எனவும் அவர் தெரிவித்தார். (எ)

# இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பாரதநாட்டியம் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஓக. 17

இந்தியாவின் 79ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மையத்தில் பாரத நாட்டியம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சென்னையைச் சேர்ந்த




சிறப்புமிக்க கலை ஆசான்கள் சிறீமதி சித்ரா முரளி தரன், சிறீ ஸ்வாமிமலை கே. சுரேஷ் மற்றும் சிறீமதி துர்க்காதேவி சுரேஷ் மற்றும் சிறீமதி கிருஷ்ணப்பிரியா ஜெயகர் ஆகியோரின் மாணவிகள் அழகிய நடனங்களை நிகழ்த்தினர்.

துணைத் தூதுவர் எஸ். சாய் முரளி, தனது உரையில், இந்தியாவிலிருந்து வருகை தந்த கலைஞர்களுக்கு நன்றியை தெரிவித்ததுடன், இந்தியாவின் வளமான பண்பாட்டு பாரம்பரியத்தை நினைவுகூர்ந்து, அது நாடுகளுக்கிடையே நட்பு மற்றும் புரிதலுக்கான பாலமாக தொடர்ந்து விளங்குகிறது என்பதை வலியுறுத்தினார்.

மேலும், இந்திய தேசியக் கொடியின் வரலாறு மற்றும் இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய காட்சியும் இடம்பெற்றது. இதன் மூலம் பார்வையாளர்கள் இந்தியாவின் சுதந்திரப் பயணத்தை ஒரு பார்வையில் அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் 300இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அதில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், பாரா ளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண செயலாளர், மூத்த அரசு அதிகாரிகள், அரசியல் மற்றும் மதத் தலைவர்கள், இந்திய சமூகத்தினர் கலந்து கொண்டனர். (எ)

# நல்லை ஆதீனத்தில் இன்று தெய்வீக கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக. 17

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன் னிட்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்ட பத்தில் கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10. 00 மணிக்கு "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வை நடத்தி வருகிறது.

அந்தவகையில் இன்று ஞாயிற்றுக்கிழமை நீர்வைக் கந்தன் புராண இதிகாச பாட சாலை மாணவர்களின் புராணப் படிப்புச் சேரியும் நுண் கலைமாணி திருமதி கவிதா வாமதேவ சர்மாவின் மாணவர்கள் வழங்கும் வீணை இசை நிகழ்வும்

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன இசை மாணவர்கள் மாணவர்கள் வழங்கும் வாத் திய இசை நிகழ்வும்

உஷாகானம் நிறுவனம் வழங்கும் வயலினிசை நிகழ்வும் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அழைப்பு விடுத்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப்பிறழ்வான செயல்பாடுகளுக்கு எதிர்காலத்தில் வாய்ப்பு வழங்கப்படாது

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக. 17

**எமது பிரதேசங்களில் சமூகப்பிறழ்வுகள் கடந்த காலங்களில் திட்டமிட்ட ரீதியில் ஊக்குவிக்கப்பட்டன. ஆனால், எதிர்காலத்தில் அவ்வாறு நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை என்று நான் நம்புகின்றேன்- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.**



கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அமரர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அரங்கில் பிரதேச செயலர் த. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆளுநர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கலைஞர்களுக்கான விருதுகளையும் வழங்கிக் கௌரவித்தார்.

ஆளுநர் தனது உரையில், "எங்களது தனித்துவமான பண்பாடுகளைப் பேணிப்பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கடத்துவதற்காக இவ்வாறான விழாக்கள் அவசியமானவை. விருந்தோம்பல், இரங்குதல், முதியோரை மதித்தல் என்பன எங்கள் தமிழர்களின் தனித்துவமான பண்பாடுகள். கால ஓட்டத்தில் அதாவது பழையன கழிதலும் புதியன புகுதலும் அவசியம்தான். அதற்காக நாம் எமது சமூகத்துக்கு ஒவ்வாத விடயங்களை உள்வாங்கக் கூடாது. நல்லவற்றை எடுத்துக் கொள்வோம்.

எமது இளம் சமூகத்தின் செயல்பாடுகள் தொடர்பிலும் கவலையடைகின்றனர். அவர்களை கல்விக்கு மேலதிகமாக இரண்டு வழிகள் ஊடாக மாற்றலாம் என்பது எனது ஆழமான நம்பிக்கை. கலை, விளையாட்டு ஆகியன ஊடாகவே அவர்களை மடைமாற்றம் செய்யலாம். அவர்களுக்கு இந்த இரண்டு செயல்பாட்டிலும் வாய்ப்புக்களை நாங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். சமூகப் பிறழ்வுகளை முறியடித்து நாம் முன்னேற வேண்டும்.

ஒருவரை வாழும் போதே கௌரவிப்பதுதான் பெருமை. நீங்கள் இங்கு மூத்த கலைஞர்களை கௌரவித்திருக்கின்றீர்கள். மிகச் சிறப்பான விடயம். அதேபோல இளம் கலைஞர்களையும் ஊக்குவித்திருக்கின்றீர்கள். இதைத் தொடர்ந்து செய்யுங்கள். கலைகளை வளர்ப்பதற்கு நீங்கள் எடுக்கும் ஆரோக்கியமான நகர்வுகளுக்கு எமது ஆதரவு எப்போதும் இருக்கும்" - என்றார்.

இந்த நிகழ்வில் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு. சுரேன், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (எ-05)

# இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து;ஒருவர் பலி

## 22 பேர் மருத்துவமனையில் அனுமதி

மொனராகலை, ஒக. 17

மொனராகலை, வெலியாய பகுதியில் தனியார் பஸ் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 22 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்றுச் சனிக்கிழமை காலை இடம் பெற்றது.


விபத்தில், இ. போ. ச. பஸ் சாரதியே உயிரிழந்தார்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மொனராகலை மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)





# கறுப்பு கொடி பறக்கவிட்டு புங்குடுதீவில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 17

புங்குடுதீவு தனியார் போக்குவரத்து சங்கத்தினர் நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர். கறுப்புக் கொடியை பறக்கவிட்டு பதாகைகளை ஏந்தி கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 10 ஆம் திகதி அன்று தனது வீட்டில் இருந்தவேளை வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட ஐயாத்துரை அற்புதராசாவின் கொலைக்கு நீதி வேண்டியும் கொலையாளிகளை விரைந்து கைது செய்யக்கோரியும் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதனால் புங்குடுதீவு - யாழ்ப்பாணம் இடையேயான போக்குவரத்து சேவைகள் இடம்பெறவில்லை. (எ)

# கனிய மணல் அகழ்வுக்கு எதிராக மன்னாரில் தொடரும் போராட்டம்

மன்னார், ஒக. 17

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை, கனிய மணல் அகழ்வு செயல்திட்டங்கள் தொடர்பில் உறுதியானதும் இறுதியானதுமான தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என தெரிவித்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 13 ஆவது நாளாகவும் மன்னார் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.



மன்னார் பிரதான சுற்றுவட்ட பகுதியில் மக்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதியுடன் அண்மையில் நடைபெற்ற சந்திப்பில் காற்றாலை செயல்திட்டங்களை ஒரு மாத காலம் நிறுத்தி வைப்பதாக ஜனாதிபதியால் வாக்குறுதி வழங்கப்பட்ட போதிலும் உறுதியான முடிவு வரும் வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லை என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

முன்னதாகவே ஒரு வாரகாலம் காற்றாலை செயல்திட்டத்தை நிறுத்தி வைப்பதாக எரிசக்தி அமைச்சர் தெரிவித்த நிலையில், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் நள்ளிரவு நேரங்களில் காற்றாலை செயல்திட்டங்களுக்கான உதிரிப்பாகங்கள் மன்னார் நகருக்குள் மக்களின் எதிர்ப்பை மீறியும் கொண்டு செல்லப்பட்டன.

இந்தப் பின்னணியிலேயே ஜனாதிபதியின் வாக்குறுதியிலும் நம்பிக்கையற்ற தன்மையே காணப்படுவதன் அடிப்படையில் மக்கள் தொடர்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம், மற்றும் பாராளுமன்றத் தேர்தல் பிரசாரம், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரம் என அனைத்திலும் தேசிய மக்கள் சக்தியின் வாக்குறுதியாக காற்றாலை செயல்திட்டத்துக்கு அனுமதி எமது அரசாங்கத்தால் வழங்கப்படாது எனப் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு வாக்குறுதி வழங்கப்பட்ட போதும் அவை நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் இந்த ஒரு மாத வாக்குறுதியை மாத்திரம் எவ்வாறு நம்புவது என பொது மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

(எ)

# ஏஐ பயன்பாடு தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வு

கொழும்பு, ஒக. 17

அரச சேவையை பயனுள்ள மற்றும் செயல்திறனான சேவையாக மாற்றுவதற்கு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது குறித்து அரச நிறைவேற்று அதிகாரிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட விசேட செயலமர்வு வெள்ளிக்கிழமை அலரிமாளிகையில் நடைபெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் டிஜிற்றல் பொருளாதார அமைச்சால் இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. பிரதமர் அலுவலகம், அமைச்சரவை அலுவலகம் மற்றும் ஏனைய அமைச்சுக்கள் உட்பட பத்து அமைச்சுக்களின் நிறைவேற்று அதிகாரிகள் இந்த செயலமர்வில் பங்கேற்றனர்.

அரச சேவையை டிஜிற்றல் மயமாக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் ஆரம்ப பிரவேசமாக, அரச அதிகாரிகளை அறிவூட்டுதல் மற்றும் தயார்படுத்துதல் மற்றும் அரச சேவைக்குள் செயற்கை நுண்ணறிவு குறித்த சாதகமான அணுகுமுறையை ஏற்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில், கலந்து கொண்ட ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க, டிஜிற்றல் மாற்றத்துக்கான தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருவதாகவும் அரச சேவை அதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதன் மூலம் அரச சேவையின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹர்த்தாலுக்கு ஆதரவில்லை தீர்மானத்தில் மாற்றமில்லை

**வவுனியா வர்த்தர் சங்க தலைவர் தெரிவிப்பு**

வவுனியா, ஓக. 17

**நாளை 18 ஆம் திகதி அழைப்பு விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தால் தொடர்பில் வவுனியா வர்த்தகர் சங்கம் எடுத்த தீர்மானத்தில் எந்தவித மாற்றமும் வராது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.**

வவுனியா வர்த்தகர் சங்கம் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்காது எனவும் கடைகள் வழமை போன்று திறக்கும் எனவும் வர்த்தகர் சங்க நிர்வாக கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனினும், சிலர் வர்த்தக சங்கம் மீளவும் ஆராய்ந்து முடிவை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாக தெரிவித்து வரும் நிலையில் வர்த்தகர் சங்கத்தின் தலைவரிடம் கேட்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வர்த்தகர் சங்க நிர்வாக சபை கூடி ஒரு முடிவை எடுத்து அறிவித்துள்ளது. அதில் எந்தவித மாற்றத்துக்கும் இனி இடம் இருக்காது. ஹர்த்தாலுக்கு நாம் ஆதரவு தெரிவிக்கப் போவதில்லை. இது வர்த்தகர்களுடைய கருத்துக்களின் பிரகாரம் எடுக்கப்பட்ட முடிவுவாக காணப்படுகிறது. எனவே, எவர் எவ்வாறான கருத்துக்களை பரிமாறினாலும் எமது தீர்மானத்தில் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. நாம் ஆராய்ந்து இந்த தீர்மானங்களை எடுத்து வெளியிட்டுள்ளோம்- என்றார். (எ-10)

## ஹர்த்தாலுக்கு ஆதரவு வேண்டும்

யாழ்ப்பாணம், ஓக. 17

மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் இராணுவ அரசாங்கத்துக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையிலும் அனைத்துத் தரப்பினரும் நாளை ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு வழங்க வேண்டும் என்று வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ச. ஜயந்தன் தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்திலே காலாகாலமாக இராணுவத்தின் அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன. இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி மக்களுக்கான நீதியான விசாரணைகள் நடைபெறவுமில்லை. அதற்கான ஏற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டதாக தெரியவில்லை.

இது இவ்வாறு இருக்கையில் முல்லைத்தீவு - முத்துஐயன் கட்டிலே ஒரு குடும்பஸ்தரின் கொலைச் சம்பவம் இடம்பெற்றது. அந்த குடும்பஸ்தர் ஏதாவது தவறு செய்திருந்தால் அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்து அவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். தண்டிப்பதற்கு இராணுவத்தினருக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை.

அவரது மரணத்துக்கு காரணமான இராணுவத்தினர் கைது செய்யப்பட்டிருந்தாலும் கூட நீதியான விசாரணைகள் இடம்பெறுமா? என்ற சந்தேகம் தமிழ் மக்களிடத்தே காணப்படுகிறது. இந்த பிரச்னை தென்னிலங்கையில் ஏற்பட்டால் அங்கு பாரிய ஓர் ஆர்ப்பாட்டம் நடந்திருக்கும்"- என்றார். (எ-05)

## 5 கோடி ரூபாய் மதிப்புள்ள கஞ்சாவுடன் இருவர் கைது

கொழும்பு, ஓக. 17

5 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதி கொண்ட கேரளக் கஞ்சாவுடன் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் கடத்தலை தடுக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் தேடுதலின் போதே குறித்த 2 சந்தேகநபர்களும் கைதாகியுள்ளனர்.

இதன்படி, பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் மாலை வத்தளை பொலிஸ் பிரிவின் பங்களாவத்த பகுதியில் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது சுமார் 309 கிலோ கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சாவை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 43 மற்றும் 49 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களால் வாடகைக்கு பெறப்பட்டிருந்த வீட்டின் அறை ஒன்றிலேயே கேரளக் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் வெலிசறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

## நீரில் மூழ்கி சிறுவன் பலி!

புத்தளம், ஓக. 17

புத்தளம் - மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஏரியில் நீராடிக் கொண்டிருந்த சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகள் இணைந்து நீரில் மூழ்கிய சிறுவனை மீட்டு, புத்தளம் மருத்துவமனையில் அனுமதித்த நிலையில் சிறுவன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவன் புத்தளம் - கரிகட்டிய பகுதியைச் சேர்ந்த 12 வயதுடையவர் ஆவார்.

இந்தச் சம்பவம் குறித்து மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)



## ஜனாதிபதியை சந்தித்தார் புதிய பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, ஓக. 17

புதிய பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்தார்.

புதிய பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி தனது வாழ்த்துகளைத் தெரிவித்ததோடு ஜனாதிபதிக்கு அவர் நினைவுப் பரிசு வழங்கினார். பிரியந்த வீரசூரிய 37 ஆவது பொலிஸ்மா அதிபர் ஆவார். (எ)

## தபால் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஓக. 17

தபால் மற்றும் தொலைத் தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியினர் இன்று முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

இன்று மாலை 04.00 மணி முதல் குறித்த ஊழியர்கள் தமது சேவையிலிருந்து விலகி பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தபால் ஊழியர்களின் மேலதிக கொடுப்பனவு, நிர்வாக அலுவலகம் மற்றும் கணக்காய்வு அலுவலகங்களில் ஊழியர்களின் பணியை ஆரம்பிக்கும் நேரம் மற்றும் வெளியேறும் நேரம் என்பனவற்றை கைவிரல் அடையாள இயந்திரங்களில் பதிய வேண்டும் என்ற அறிவுறுத்தல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் உள்ளிட்ட 19 கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளனர். (எ)

## சர்வதேச சந்தையை வெற்றி கொள்ள நிலையான கொள்கை உருவாக்கம்

**பிரதமர் ஹரிணி தெரிவிப்பு**



கொழும்பு, ஓக. 17

சர்வதேச மாணிக்கக்கல் மற்றும் ஆபரண சந்தையை வெற்றி கொள்ளும் வகையில் நிலையான கொள்கை ஒன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்லும் நோக்குடன் மூன்று நாட்கள் பெல்மடுல்ல கிராண்ட் சில்வரே விடுதியில் நடைபெறும் சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சி 2025-இன் தொடக்க விழாவில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கையின் மாணிக்கக் கற்கள் உலக பிரசித்தமானவையாகும். அவற்றில் பெரும்பாலானவை இரத்தினபுரியிலேயே கண்டறியப்பட்டுள்ளன. ஆனால், இரத்தினபுரிக்கு அதற்கான கௌரவம் கிடைத்துள்ளதா? என்பது கேள்விக்குறியாகும். உயர்தர மாணிக்க கற்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் தேசிய பொருளாதாரத்துக்கு இரத்தினபுரி மாவட்டம் பாரிய பங்களிப்பை வழங்குகின்றது. இருப்பினும் இந்தத் துறையில் உள்நாட்டு ஏற்றுமதி வருவாய்க்கான அதிகபட்ச திறனை நாம் இன்னும் எட்டவில்லை. பொருத்தமல்லாத கொள்கைகள் இந்த துறையின் அபிவிருத்தியை பாதிப்படைய செய்துள்ளன. எனினும், இதற்கு நிலையான கொள்கை ஒன்றை வகுப்பதற்கு எங்கள் அரசாங்கம் உறுதியாக உள்ளது"- என்றார். (எ)

## விசேட சுற்றிவளைப்பில் மேலும் 689 பேர் கைது

கொழும்பு, ஓக. 17

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட தேடுதல் நடவடிக்கைகளில் நேற்றுக்காலை 10. 00 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 689 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றங்களுடன் நேரடியாக தொடர்புடைய 24 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 242 பேரும் அவர்களில் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதவிர, பகிரங்க பிடியாணை பிறப்பட்டிருந்த 158 பேரும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் மது அருந்தி விட்டு வாகனம் செலுத்திய 100 பேர் கைது செய்யப்பட்டதுடன், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

போக்குவரத்து குற்றங்கள் தொடர்பில் 3635 பேருக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மதுபானசாலைகளுக்கு இனி அனுமதி இல்லை

**நகரசபையில் ஏகமனதாக தீர்மானம்**

ஹற்றன், ஓக. 17

நுவரெலியா, ஹற்றன் நகரில் எதிர்காலத்தில் புதிய மதுபான சாலைகளை அனுமதிப்பதில்லையென ஹற்றன் - டிக்கோயா நகர சபையில் ஏகமனதாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

நகர சபைத் தவிசாளர் அசோக கருணாரத்ன தலைமையில் வெள்ளிக்கிழமை சபை கூடியபோது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
17.08.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஆடி 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# 'ஈகோ' அரசியல்

விமர்சனங்களை முன்வைக்க முடியுமானாலும் கூட, 2009இற்கு முன்னரான அரசியல் சூழல் என்பது அர்ப்பணிப்புக்கள், தியாகங்களால் நிரம்பியிருந்தது. தமிழ் அரசு கட்சியின் ஆரம்ப கர்த்தாக்களின் அரசியல் அணுகுமுறை வெற்றியளிக்காது போனாலும் கூட, அவர்களின் அணுகுமுறைகள் தொடர்பில் விமர்சனங்கள் இருப்பினும் கூட, அவர்கள் தங்களின் ஈகோவின் அடிப்படையில் அரசியல் முடிவுகளை மேற்கொள்ளவில்லை. தமிழ் அரசு கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தன்னுடைய 'ஈகோ'விற்கு முக்கித்துவம் கொடுத்திருந்தால், ஜி.ஜி.பொன்னம்பலத்தின் வீடு தேடிச் சென்றிருக்கமாட்டார்.

தமிழ் அரசு கட்சியாக பயணிப்பது இனியும் பயனுடையது அல்ல என்னும் நிலைப்பாட்டை மேற்கொண்ட பின்னர்தான், அவர் பொன்னம்பலத்தின் வீடு தேடிச் சென்றார். செல்வநாயகத்தின் அரசியல் முடிவுகளில் பொன்னம்பலம் உடன்பட்டாரா என்பது வேறு விடயம் ஆனால், வீடு தேடிச் சென்று செல்வநாயகம் பேசியதைத் தொடர்ந்து தன்னுடைய 'ஈகோ' வை புறம்தள்ளி செல்வநாயகத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தார். இந்தப் பின்புலத்தில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகியது.

செல்வநாயகத்தின் அணுகுமுறைகள், பின்னர் அவரது வழியில் வந்த அமிர்தலிங்கத்தின் பங்களிப்புக்கள், சம வேளையில் ஐந்து பிரதான ஆயுத அமைப்புக்கள் களத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்ததன் விளைவு, அவற்றை இந்தியா போசித்ததன் பின்னணி - இவை அனைத்தினதும் விளைவாக வந்ததுதான் இந்திய - இலங்கை ஒப்பந்தம். இதன் விளைவாக வந்த மாகாண சபை முறைமையை முழுமையாக செயல் வடிவத்துக்குக் கொண்டுவருவது பற்றித்தான் நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கின்றோம். விடுதலைப் புலிகள் அமைப்பு இதற்கு மாறாக, தனிநாடு ஒன்றை அடைய முடியுமென்று அதன் வழியில் சென்றது. இது வரலாறு.

இந்த வரலாற்றின் விளைவு என்னவென்றால் இப்போது தமிழர்கள் எதுவுமின்றி வெறுங் கையில் முளம் செய்ய முற்படும் நிலையில் இருக்கின்றனர். அரசியல் இயங்கு நிலை என்பது பேரம் பேசுவதற்கான பலமாகும். அதாவது எங்களுடன் பேச வேண்டும் என்பதானது, நாங்கள் தேவை என்னும் நிலையில் மட்டும்தான் இடம்பெறும். இப்போது அதற்கான சிறிய வாய்ப்புக் கூட தென்படவில்லை. இவ்வாறானதொரு சூழலில் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் எவ்வாறான பொறுப்புணர்வுடனும் தூரநோக்குடனும் செயலாற்ற வேண்டும்? ஆனால், என்ன நடந்து கொண்டிருக்கின்றது.

தமிழ் அரசுக் கட்சி ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கின்றது. ஆனால், ஏனைய கட்சிகளுக்கு அது பற்றி எதுவும் தெரியாது. ஏனையவர்களுடன் கலந்துரையாடி முடிவெடுக்க முடியாதளவிற்கு தமிழ் அரசு கட்சி அதன் இன்றைய முக்கியஸ்தர்களின் 'ஈகோ'வால் கட்டுண்டு கிடக்கின்றது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் மக்கள் பேரவை ஆகக் குறைந்தது அனைவரையும் அழைத்து கலந்துரையாடியிருந்தது. ஆனால், அதனை ஏன் தமிழ் அரசுக் கட்சியால் செய்யமுடியாமல் போனது?

வடக்கு, கிழக்கில் கடைகளை பூட்டுவதில் நாங்கள் வெற்றி பெற்றிருக்கின்றோம் என்று கோஷமிடுவதில் அப்படி என்ன நடந்துவிடப் போகின்றது? யாரை திருப்திப்படுத்த இவ்வாறான நடவடிக்கைகள் மூடிய அறைகளுக்குள் தீர்மானிக்கப்படுகின்றன?

'ஈழநாடு' தொடர்ந்தும் ஒரு விடயத்தை திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்திருக்கின்றது. இது கட்சி வாதங்களை முன்வைத்து, 'ஈகோ' பேசும் காலமல்ல - மாறாக, அனைவரும் ஒன்றாக நிற்கின்றோம், யதார்த்தமாக பயணிக்கின்றோம் என்பதை காண்பிப்பதற்கான காலம். ஆனால், கேட்பாரில்லை. தங்களின் 'ஈகோ'விற்கு தமிழர்களை பலியிடாமல் நாங்கள் ஓயப்போவதில்லை என்னும் வெறியே அனைவரையும் அலைக்கழிக்கின்றது.

# வடக்கு-கிழக்கில் நடக்கவுள்ள கடையடைப்பு தேவையற்றது!

## பொது பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஓக. 16

வடக்கு-கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள கடையடைப்பு போராட்டம் தேவையற்ற ஒன்று என பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கொழும்பு ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் முல்லைத்தீவு பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் இராணுவத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் எதிர்வரும் 18ஆம் திகதி வடக்கு கிழக்கில் கடையடைப்பு போராட்டத்தில் இலங்கை தமிழரசு கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடையடைப்பு போராட்டத்திற்கு எந்த காரணமும் இல்லை. கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும், அதை நடத்த எந்த காரணமும் இல்லை.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும், நீதிமன்ற உத்தரவுகளின்படி அடுத்த நடவடிக்கைளை நாங்கள் எடுப்போம்.

இந்நிலையில், கடையடைப்பு போராட்டம் நடத்துவது பயனற்ற செயல்.

மேலும், இதேபோன்ற சம்பவங்கள் மற்ற மாகாணங்களிலும் நடக்கின்றன. ஆனால் அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் இவ்வாறு கடையடைப்பு போராட்டங்களை நடத்துவதில்லை.

இந்த சம்பவங்களை நாம் இனம் அல்லது மதத்தின் பார்வையில் பார்க்கக்கூடாது. ஒரு குற்றம் நடக்கும்போது, பொறுப்பான எவருக்கும் எதிராக, அவர்களின் பின்னணியைப் பொருட்படுத்தாமல் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக இதை நாங்கள் நடைமுறையில் நிரூபித்துள்ளோம்-என்றார்.

அண்மையில் முல்லைத்தீவு - முத்து ஐயன் கட்டு பகுதியில் இராணுவத்தின் தாக்குதலில் 32 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் வடக்கு-கிழக்கு பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இராணுவ முகாமுக்கு அருகில் அமைந்துள்ள முத்து ஐயன்கட்டு குளத்தில் குறித்த இளைஞரின் உடல் கண்டெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னார் மக்களின் உரிமை, சுற்றுலாடலுக்கு பாதிப்பை தரும் தீர்மானங்கள் எடுக்கப்படா!

## வலு சக்தி அமைச்சர் உறுதி

கொழும்பு, ஓக. 16

அரசாங்கம் என்ற ரீதியில் மக்களின் உரிமைகளுக்கோ அல்லது சுற்றுச்சூழலுக்கோ பாதிப்பு ஏற்படும் எந்த ஒரு தீர்மானத்தையும் எடுக்க மாட்டோம். அந்த வகையிலேயே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஆலோசனைக்கமைய மன்னார் கற்றாலை மின் உற்பத்தி திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

காற்றாலை மின் திட்டத்துக்கு பொருத்தமான இடம் என்பதாலேயே மன்னார் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மன்னாரிலும் அதன் தீவுப் பகுதிகளிலும் ஒப்பந்தங்களுக்கு அமைய இவ்வாறான மின் உற்பத்தி திட்டங்கள் காலம் காலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கமைய அங்கு இரு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவற்றில் ஒன்று 20 மெகாவோல்ட் வேலைத் திட்டமாகும். மேலும் 50 மெகாவோல்ட் திட்டத்துக்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இவற்றுக்கு முன்னர் 250 மெகாவோல்ட் மின் உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதானி நிறுவனத்துடன் இந்த வேலை திட்டத்துக்கான உடன்பாடு எட்டப்பட்டிருந்தது.

எவ்வாறிருப்பினும் தற்போது இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது. குறித்த பிரதேசத்தில் ஆயிரம் மெகாவாட் வரை மின் உற்பத்தி திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான இயலுமை காணப்படுகிறது. கடற் பகுதிகள் அல்லாமல் நிலப்பரப்புகளில் மாத்திரம் ஆயிரம் மெகாவோல்ட் மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியும். இங்கு முன்னெடுக்கப்படும் வேலை திட்டங்கள் அபிவிருத்திகளை அடிப்படையாகக் கொண்டே இடம் பெறுகின்றன.

20 மெகாவோல்ட் மின் உற்பத்தி வேலை திட்டத்துக்கான பொருட்கள் போக்குவரத்து தொடர்பிலேயே எதிர்ப்புகள் வெளியாகி உள்ளன. இது தொடர்பில் அப்பிரதேச மத தலைவர்கள் உள்ளிட்ட முக்கிய தரப்பினரு டனும் கடந்த வாரம் ஜனாதிபதியுடனும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. அதற்கமையவே ஒரு மாத காலத்துக்கு அந்த திட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

அரசாங்கம் என்ற ரீதியில் மக்களின் உரிமைகளுக்கோ அல்லது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் எந்த ஒரு தீர்மானத்தையும் எடுக்க மாட்டோம் என உறுதியாக குறிப்பிடுகின்றேன் - என்றார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருத்தல் என்னும் கலை!

சேதுபதி

பரபரப்பு ஒரு தொற்றுநோய்போல் பற்றிக் கொண்டு, பதற்றம் என்கிற துணை நோயையும் கொண்டு வந்து சேர்த்து மக்களைப் படுத்தும்பாடு பெரும்பாடாய் இருக்கிறது. இதற்கு மறுதலையாய், மருந்தாய் இருப்பது பொறுமை.


'பொறுமை கடலினும் பெரிது' என்று சொல்லப்படுகிறது. உண்மையில் பொறுக்கமாட்டாத கடல்தான் அலைமேல் அலையாய் வந்து நிலம் மீது மோதிக் கொண்டே இருக்கிறது. ஆனாலும், ஆழ்கடல் அமைதி மேல் கடலின் அலையை அவ்வப்போது கட்டுப்படுத்திக் கொண்டு வருகிறது.

தம்மை அகழ்வாரையும் நிலம் தாங்கிக் கொண்டு இருப்பதைப்போல், நாமும் நம்மை இகழ்வாரைப் பொறுத்துக் கொண்டு இருப்பது தலையாய பண்பு என்கிறது திருக்குறள். இதனை அடியொற்றியே, 'பொறுத்தார் பூமி ஆள்வார்" என்ற பழமொழியும் வந்திருக்க வேண்டும். நிலத்தின் இயல்பு நிலத்தை ஆள்பவர்க்கும் வேண்டுமே.

இது நாடாள்வோருக்கு மட்டுமன்றி, வீடாள்பவர்க்கும் பொருந்தும். ஆக, ஆளுமைப் பண்புக்கு அடிப்படைப் பண்பாக இருப்பது பொறுமை. அதற்கு எதிர்நிலையாக, 'பொறாதார் காடாள்வார்" என்றும் அந்தப் பழமொழி விளக்கம் தருகிறது. பொறுத்துக் கொள்கிற வரைக்கும் வலியானது வலிமையாகிறது. பொறுத்துக் கொள்ள முடியாத நிலையில், உடலைக் காட்டுக்கு அனுப்பி, உயிர் விடைபெற்றுக் கொள்கிறது.

எடுத்த பிறவி நிலைக்கவும், தொடரவும் பொறுமை மிகவும் அவசியம். விதைத்தவுடனே முளைத்து மரமாகிக் கனி வரவேண்டும் என்று நினைப்பது இயற்கைக்கு முரண் அல்லவா? 'மந்திரத்தில் மாங்காய் காய்க்குமா" என்ற கேள்வி, இதன்வழி பிறந்தது. இயந்திரங்களைக் கொண்டு இயற்கையின் பொறுமைக்கு மாறாக, விரைந்து ஆற்றிவரும் பணிகள் அவ்வப்போது வெற்றியைத் தந்தாலும் அவை தொடர் வெற்றியாக அமையுமா என்பது ஐயமே.

'நாளும் ஒரு பொன்முட்டை இடும் வாத்தை வளர்த்



தவனுக்குப் பேராசை ஒட்டுமொத்தமாய் அத்தனை முட்டைகளையும் பெற்றுவிட வேண்டும் என்று அதன் வயிற்றைக் கீறிப் பார்த்தபோது, ஒற்றை முட்டை மட்டுமே உள் இருந்தது' என்று சொல்லப்படுகிற கதை வெறும் கதையா? உயிர் இழந்த வாத்து ஒருபோதும் முட்டை இடாது. உயர்குணங்கள் பல இருந்தும் உரிய காலம், சூழல் வரும் வரை காத்து இருக்கப் பழகாதவனுக்கு எதுவும் வாய்க்காது.

பொங்கி வடித்து, உண்கலத்தில் இட்ட சோற்றினைத் தாங்க முடியாத பசியுடையவன் அள்ளிப் புசிக்க நினைத்துச் சூடுபட்ட வேகத்தில் பிறந்த சொலவடை, 'ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்கவில்லை". ஆக்கப் பொறுத்தல் என்றால், நெல்லாக்க, அரிசியாக்க, அதைப் பின் சோறாக்கப் படுகிற பாடு அனைத்தையும் பொறுத்தல் என்பது உள்ளொடுங்கும். அதைவிடவும், கொதிக்கும் உலையில் அரிசியிடும்போதும், வெந்த சோற்றை வடித்திடும்போதும் 'சட்டி சுட்டதடா, கை விட்டதடா" என்று விட்டுவிடாமல், அந்தச் சூட்டையும் தாங்கி ஆக்கிய சோற்றை, அள்ளிப் புசிக்க அவசரப்படும்போது, பட்ட சூட்டின் பதிவாகச் சொல்லிய அனுபவ வாக்கு அச் சொலவடை. இது சுடச் சுட அள்ளிய சோற்றுக்கு மட்டுமல்ல, சுறுசுறுப்புக்கும் அப்பால் விரைவுபடுத்தும் வேகத்துக்கும் வைக்கப்படும் முட்டுக்கட்டை.

முட்டுக்கட்டை என்பது முன்னேற்றத்தைத் தடுப்பதாகப் பலரும் நினைப்பதுண்டு. உண்மையில் அது முறையற்ற வேகத்தைக் கட்டுப்படுத்தும் கருவி. ஊர் கூடி இழுக்கும் தேருக்கு முன்னோர் கண்ட தடைக்கட்டை ('பிரேக்')தான் இந்த முட்டுக்கட்டை. ஊருக்கும் தேருக்கும் ஊறு நேராமல், தனக்கு நேரும் வலியைப் பொறுத்துக் கொண்டு, தலைக்கொடுப்பது இது. இதைக் கையாளுபவர்களின் கவனம் நிகர்த்தது, கடமையாற்றும் பெரியவர்களின் நிலைப்பாடு. பயமறியாது பாயும் இளங்கன்றுகளாம் இளைஞர்களைப் பெரியவர்கள் தடுத்து ஆட்கொள்வது இவ்வகைப்பட்டது.

ஊருக்கோ, உலகுக்கோ தலைவனாய் இருக்கும் யாருக்கும் தலைவியாய் இருப்பவள் வாழ்க்கைத் துணைநலம். அதற்கு இலக்கணம் வகுத்த திருவள்ளுவர், தற்காப்பைத் தான் முதலில் சொல்லிக் கொடுக்கிறார்.

'தற்காத்து' தன்னைக் காத்துக் கொள்வதுதான் தலைவியின் முதற்பணி. இது தன்னலம் இல்லை. தற்கொண்டானாகிய கணவனையும் தம்மை நம்பிப் பிறந்த பிள்ளைகளையும் தாங்கிப் பேணக் கற்கும் குடும்பக் கல்வி. பேணுதல் என்பது பெண்மையின் இயல்பு. தற்காத்தல் முதல் நிலை என்றால், 'தகை சான்ற சொற்காத்தல்' வளர்நிலை. அது அவ்வளவு எளிதானது இல்லை.

மனதில் உதித்ததை வாயால் வெளிப்படுத்தக்கூடாது என்ற நிலையில், சொல்ல நினைத்ததைக்கூடச் சொல்லாமல் இருந்துவிடலாம். ஆனால், தன்முன் பிறர் சொல்லிய சொல்லினை, - அது புகழ்ச் சொல்லானாலும் சரி, பழிச் சொல்லாயினும் சரி. அதன் நிலைபொறுத்துத் தன்வயமாக்கிப் பிறரிடம் - குறிப்பாக அச்சொல்லுக்கு உரியவரிடம் சொல்லியோ, சொல்லாமலோ, அதனால் இன்னல் வாராமல் காக்கும் பண்பு இருக்கிறதே, அது தலைமைப் பண்புக்கெல்லாம் தாய்.

ஒருமுறை பொறுத்துக் கொள்ளலாம். சில முறை பொறுத்துக் கொள்ளலாம். அதற்கும் மேல்? தேவை எனில் வாழ்நாள் முழுவதும் 'சோர்விலாது' பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறது திருக்குறள். இது மனைவிக்கு மட்டுமல்ல. மன்னனுக்கும் வேண்டிய மகத்தான பண்பு. ●

## இந்தவார ராசிபலன் 17.08.2025 - 23.08.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆவணி 01
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : நவமி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மனதுக்கு மிகவும் பிடித்தமான பழைய உறவுகளின் வரவு இதயக் கோட்டையில், தென்றல் என வீசும். மணமேடை ஏறும் மங்கல நாளும் வந்து, மனதில் மகிழ்ச்சி மலர்கள் பூக்கும். வீண் அலைச்சல்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் ஏற்படும். பெரியவர்கள் ஆதரவால் ஆடை ஆபரணங்கள் சேரும். தொழில் வாய்ப்புகள் பெருகும். புண்ணிய ஸ்தல யாத்திரை களால் மகிழ்ச்சி பெருகும். நண்பர்களுடன் மகிழ்ச்சிகரமாக காலம் கழித்தாலும், அவர்களுடன் சுமுகமாக நடந்துகொண்டால் பகைமையை தவிர்க்கலாம். அரசுப் பணிபுரிபவர்களுக்கு மேல்மட்டத்தில் உள்ளவர்களின் ஆதரவால் பதவி உயர்வுகள் கிடைக்கும் வாய்ப்புகள் ஏற்படும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் தனவரவு அதிகரிக்கும். பெண்களின் தெய்வ காரிய ஈடுபாடு குடும்பத்தில் உள்ளவர்களுக்கு முன்னேற்றத்தை அளிக்கும். மேடைப் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், வாதம் புரிபவர்கள் ஆகியோருக்கு வாக்கு வன்மையால், வழக்கத்திற்கு அதிகமாக வருமானம் பெருகும்.மாணவர்கள் போட்டி, பந்தயங்களில் வெற்றி அடைவர். சிலருக்குத் தொழிலில் தேவையற்ற அலைச்சல்களும், காரியத் தடைகள் ஏற்படலாம்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்கள் பொருளாதார நிலை போதுமான அளவு திருப்திகரமாக இருக்கும். செல்வமும், கௌரவமும் மிக்கவர்களின் நட்பால், நல்ல முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். குடும்பத்தில் ஆரோக்கியம் மேம்பட்டு, வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். தொலைதூர சுபச்செய்திகள் மகிழ்வைத் தரும். பிறருக்கு நன்மை செய்யும் இரக்க குணமுடையவர்கள் வாழ்க்கையில் நற்பலன்களை எதிர்பார்க்கலாம்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பாராத இடங்களில் இருந்து கூட பண வரவு தாராளமாக இருக்கும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். வாகனங்களில் செல்கையில் வேகத்தை குறைத்து எச்சரிக்கையுடன் சென்றால் சிறு விபத்துகள் ஏற்படாமல் தவிர்க்கலாம். மற்றபடி, வாழ்க்கையில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். சுற்றத்தார் மூலமாகவும் பண உதவிகள் கிடைக்கும்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். சிலருக்கு உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படும். வியாபாரத்தில் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். வாகனங்களில் எச்சரிக்கையுடன் சென்றால் விபத்தை தவிர்க்கலாம்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

சித்திரை-3,4 பாதங்கள் - இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். பிறந்த நாள் விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். தொலைதூர செய்திகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். பயணங்களால் ஆதாயம் மற்றும் மகிழ்ச்சியும் ஏற்படும். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. தொழில் இலாபம் அதிகரிக்கும். திடீரென ஏற்படும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் கெட்டி மேளம் கொட்டும் நேரம் வரும். பெற்றோர்களின் மனம் பேரின்பம் அடையும். முன்னர், கஷ்டம், முடியாது என நினைத்துக் கை விட்ட வேலையை தங்கள் திறமை கொண்டு வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். வியாபாரத் தொடர்பு மற்றும் சுற்றுலா போன்ற இனிய பயணங்கள் இலாபமும், இன்பமும் தரும். சுற்றத்தாரிடையே நல்ல பெயர் எடுப்பீர்கள். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் செயல்திறன் அதிகரிக்கும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். பெரும் புள்ளிகளின் அறிமுகத்தால் நன் மைகள் ஏற்படும். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும். நல்ல வளர்ச்சி ஏற்படும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சகோதர முன்னேற்றம், காரிய சித்தி, தலைமைப் பதவி ஆகியவை ஏற்படும். வித்தைகளில் தேர்ச்சியும் அறிவுத் திறனும் கூடும். உழைப்பு அதிகமாகி களைப்பும், சோர்வும் ஏற்படும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் அன்னையின் அன்பும் அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். கூட்டாளிகளின் நியாயமற்ற செயல்பாடுகள் எரிச்சலைத் தரும். தொழிலில் போட்டி களைச் சமாளிக்க கடினமாக உழைக்க வேண்டியது வரும். பயணங்கள் மேற்கொள்ள நேரும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். . பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்காது என்று தெரிந்திருந்தும் நோபல் சமாதானப் பரிசுக்கு ஆசைப்படும் டொனால்ட் ட்ரம்ப்



வீரகத்தி தனபாலசிங்கம்

1900 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட நோபல் பவுண்டேசன் அடுத்த ஆண்டில் இருந்து நோபல் சமாதானப் பரிசை வழங்கி வருகிறது. 124 வருட வரலாற்றில் அந்த பரிசு இதுவரையில் 97 பேருக்கும் 20 அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களில் அமெரிக்க ஜனாதிபதிகள், துணை ஜனாதிபதிகள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களும் அடங்குவர்.

தியோடர் ரூஸ்வெல்ற் ( 1901 - 1909), வூட்ரோ வில்சன் ( 1913 - 1921) மற்றும் பராக் ஒபாமா (2009 - 2017 ஆகியோரே பதவியில் இருந்த வேளையில் நோபல் சமாதானப் பரிசைப் பெற்ற அமெரிக்க ஜனாதிபதிகளாவர். ரஷ்யாவுக்கும்

ஜப்பானுக்கும் இடையிலான போரை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வந்தமைக்காகவும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதில் தீவிரமான அக்கறை காட்டியதற்காகவும் 1906 ஆம் ஆண்டில் ரூஸ்வெல்ற்றுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்னோடியாக அமைந்த நாடுகள் கழகத்தை (League of Nation ) அமைத்தமைக்காக 1919 ஆம் ஆண்டில் வூட்ரோ வில்சனுக்கும் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது. சர்வதேச இராஜதந்திரத்தையும் மக்களிடையே ஒத்துழைப்பையும் வலுப்படுத்துவதற்கு முயற்சிகளை முன்னெடுத்தமைக்காக ஒபாமாவுக்கு அவர் பதவிக்கு வந்த 2009 ஆம் ஆண்டிலேயே அந்த பரிசு வழங்கப்பட்டது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒருவருக்கும் முன்னாள் துணை ஜனாதிபதி ஒருவருக்கும் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது.

1977 ஆம் ஆண்டு தொடக்கம் 1981 ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்த ஜிம்மி கார்ட்டருக்கு சர்வதேச நெருக்கடிகளுக்கு சமாதானத் தீர்வுகளைக் காண்பதற்கும் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மேம்படுத்துவதற்கும் அயராத முயற்சிகளை முன்னெடுத்தமைக்காக 2002 ஆம் ஆண்டில் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது. பில் கிளின்டனின் இரு பதவிக்காலங்களிலும் (1993 - 2001) துணை ஜனாதிபதியாக இருந்த அல் கோருக்கு காலநிலை மாற்றம் குறித்து செய்த ஆய்வுகளுக்காகவும் அவை தொடர்பிலான தகவல்களை மக்கள் மத்தியில் பரப்பியமைக்காகவும் 2007 ஆம் ஆண்டில் அந்த பரிசு கிடைத்தது. அது தவிர, ஹென்றி கீசிங்கர் உட்பட நான்கு அமெரிக்க இராஜாங்க அமைச்சர்களும் நோபல் சமாதானப் பரிசைப் பெற்றனர்.

ஆனால், அவர்களில் எவருமே தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பைப் போன்று நோபல் சமாதானப் பரிசைப் பெறுவதற்காக தாங்களாகவே ஆதரவைத் திரட்டும் முயற்சிகளில் ஈடுபட்டதாக நாம் இதுவரையில் அறியவில்லை. உலகின் பல்வேறு பாகங்களிலும் மோதல்களை முடிவுக்கு கொண்டுவந்தமைக்காக சமாதானப் பரிசைப் பெறுவதற்கான தகுதி தனக்கு இருக்கிறது என்று அவரே கூறிவருகிறார். கடந்த

ஜனவரியில் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக வந்த பிறகு ஐந்து மாதங்களில் ஐந்து சர்வதேச போர்களை தடுத்து நிறுத்தியதாக கடந்த வாரம் கூறிய ட்ரம்ப் உக்ரெயினில் தொடரும் போருக்கு முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் மீது குற்றம் சுமத்தினார்.

உலக நாடுகள் மீது அடாவடித்தனமாக வரிகளை விதித்து வருவதால் சர்வதேச அரங்கில் சர்ச்சைக்குரிய ஒரு பிரபல்யத்தை பெற்றிருக்கும் ட்ரம்ப் கடந்த மாதம் நோர்வேயின் நிதியமைச்சர் ஜெனஸ் ஸ்ரொல்ரன்பேர்க்குடன் வரிவிதிப்புகள் குறித்து தொலைபேசியில் பேசிய போது நோபல் சமாதானப் பரிசை பெறுவதற்கு தான் விரும்புவதாக கூறியதாக நோர்வே பத்திரிகைகள் கடந்த வாரம் செய்திகளை வெளியிட்டிருந்தன. அமெரிக்க நிதியமைச்சர், அமெரிக்க வர்த்தக பிரதிநிதி உட்பட வெள்ளை மாளிகையின் பல்வேறு அதிகாரிகளும் தன்னுடன் பேசியதாக ஸரொல்ரன்பேர்க் ஊடகங்களுக்கு கூறினார்.

இந்திய - பாகிஸ்தான், இஸ்ரேல் - ஈரான், தாய்லாந்து - கம்போடியா, ருவாண்டா - கொங்கோ ஜனநாயக குடியரசு, சேர்பியா - கொசோவா, எகிப்து - எதியோப்பியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான ஆறு மோதல்களை ஜனாதிபதி ட்ரம்ப் முடிவுக்கு கொண்டுவந்ததாக வெள்ளைமாளிகை ஊடகச் செயலாளர் கரோலின் லீவிற் சில தினங்களுக்கு முன்னர் கூறினார். மாதத்துக்கு ஒரு சமாதான உடன்படிக்கையும் போர்நிறுத்தமும் செய்யப்படுவதற்கான வெற்றிகரமான மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபட்ட ஜனாதிபதிக்கு நோபல் சமாதானப் பரிசை வழங்குவதற்கு காலம் தாமதித்துவிட்டது என்றும் அவர் கூறினார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மூன்று மாதங்களுக்கு முன்னர் மூண்ட மோதலுக்கு முடிவைக் கட்டியதாக ட்ரம்ப் உரிமை கோருகின்ற போதிலும், இந்தியா அதை நிராகரிக்கின்றது. தெற்காசியாவின் இரு அணுவாயுத நாடுகளும் தனது கோரிக்கையை அடுத்தே மோதலை நிறுத்தியதாக அவர் இதுவரையில் பல தடவைகள் கூறியிருக்கிறார். தனது தலையீடு இல்லாதிருந்திருந்தால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான மோதல் அணுவாயுதப் போராக மாறியிருக்கும் என்று கடந்த வியாழக்கிழமை கூட ட்ரம்ப் கூறினார்.

இரு நாடுகளினதும் இராணுவ உயர் மட்டங்களுக்கு இடையிலான நேரடித் தொடர்பாடல்களை தொடர்ந்தே நான்கு நாள் மோதல்கள் நிறுத்தப்பட்டதாக இந்தியா திரும்பத் திரும்பக் கூறுகின்ற போதிலும், பாகிஸ்தான் ட்ரம்பின் கூற்றை இதுவரையில் மறுதலிக்கவில்லை. பதிலாக, "மோதல்களின்போது தீர்க்கமான இராஜந்திர தலையீட்டைச் செய்து முக்கியமான தலைமைத்துவத்தை வழங்கியதற்காக" நோபல் சமாதானப் பரிசுக்கு அமெரிக்க ஜனாதிபதியின் பெயரை நியமிக்கப் போவதாக ஜூன் மாதம் பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்தது. இராணு



வத் தளபதி அசீம் முனீருக்கும் ட்ரம்புக்கும் இடையில் நடந்த சந்திப்புக்கு பின்னரே அந்த அறிவிப்பை பாகிஸ்தான் வெளியிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக, ஜூலை மாதம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்த இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு நோபல் சமாதானப் பரிசுக்கு ட்ரம்பின் பெயரை நியமித்து நோபல் கமிட்டிக்கு தான் அனுப்பிய கடிதத்தை அவரிடம் கையளித்தார். எல்லைத் தகராறு காரணமாக தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையில் ஜூலையில் மூண்ட ஐந்து நாள் மோதல்களை முடிவுக்கு கொணடுவந்த போர்நிறுத்தத்துக்கு காரணகர்த்தாவாக இருந்த அமெரிக்க ஜனாதிபதியை சமாதானப் பரிசுக்கு நியமித்திருப்பதாக கம்போடிய பிரதமர் ஹூன் மனெற் ஆகஸ்ட் 7 ஆம் திகதி அறிவித்தார்.

முன்னாள் சோவியத் குடியரசுகளான ஆர்மேனியாவுக்கும் அசெர்பைஜானுக்கும் இடையில் மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக நீடித்துவந்த மோதல்ளை முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஆகஸ்ட் 8 வெள்ளை மாளிகையில் ட்ரம்ப் ஏற்பாடு செய்த சமாதான உச்சிமகாநாட்டில் இரு நாடுகளின் தலைவர்களும் நோபல் சமாதானப் பரிசுக்காக அவரின் பெயரை கூட்டாக நியமிப்பதாக உறுதியளித்தனர். தனது நாட்டுக்கும் அசெர்பைஜானுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்த ட்ரம்பை தவிர வேறு எந்த தலைவரினாலும் முடிந்திருக்காது என்று கூறிய ஆர்மேனிய பிரதமர் நிக்கோல் பாஷின்யான், நோபல் சமாதானப் பரிசுக்காக நியமிப்பதற்கு கடிதவரைவு ஏதாவது கைவசம் இருந்தால் உடனடியாகவே அதில் கையெழுத்திடுவதாக ட்ரம்பிடம் நகைச்சுவையாக கூறியதாக ஊடகங்கள் கூறின.

ருவாண்டாவுக்கும் கொங்கோ ஜனநாயக குடியரசுக்கும் இடையில் பல தசாப்தங்களாக நீடித்த மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதில் அமெரிக்க ஜனாதிபதி வகித்த பாத்திரத்துக்காக அவரின் பெயரை சமாதானப் பரிசுக்கு நியமனம் செய்யும் யோசனைக்கு அந்த இரு நாடுகளின் தலைவர்களும் ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள். இதுவரையில் ஐந்து நாடுகளின் தலைவர்கள் ட்ரம்புக்கு நோபல் பரிசு வழங்கப்படுவதற்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள்.

சமாதானப் பரிசுக்காக செய்யப்பட்ட உண்மையான உத்தியோகபூர்வ நியமனங்கள் அந்தரங்கமாகவே வைக்கப்பட்டிருக்கும் என்பதால் நோர்வே நோபல் கமிட்டியின் காலக்கெடுவுக்கு ( 2025 ஜனவரி 31 ) முன்னதாக ட்ரம்பின் பெயர் நியமிக்கப்பட்டதா என்பது தெளிவாக தெரியவில்லை. இந்த வருடத்துக்கான பரிசுகள் குறித்து ஆராய்வதற்காக நோபல் கமிட்டி பெப்ரவரி 28 ஆம் திகதி நடத்திய முதலாவது கூட்டத்தின் போது அதன் உறுப்பினர்கள் மேலதிக பெயர்களை பட்டியலில் சேர்த்திருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

காலக்கெடுவுக்கு முன்னதாகவே ட்ரம்பின் பெயர் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக சில அமெரிக்க ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. நோபல் சமாதானப் பரிசை பெறுபவர்களின் ( ஒருவர் அல்லது அதற்கும் அதிகமானவர்கள் ) பெயர்கள் அக்டோபர் 10 ஆம் திகதி அறிவிக்கப்படும். அந்த பரிசை வழங்கும் நிகழ்வு நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் டிசம்பர் 10 ஆம் திகதி நடைபெறும்.

அமெரிக்க ஜனாதிபதியை சமாதானப் பரிசுக்கு நியமனம் செய்திருக்கும் நாடுகளின் குறிப்பாக ருவாண்டா, இஸ்ரேல், கபோன், அசெர்பைஜான் மற்றும் கம்போடியா ஆகியவற்றின் தலைவர்கள் எதேச்சாதிகார ஆட்சியாளர்களாக, இராணுவ ஆட்சியாளர்களாக அல்லது சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களாக இருப்பதால், அவர்களுடைய ஆதரவு நோபல் கமிட்டியின் தெரிவில் எதிர்மறையான தாக்கத்தைச் செலுத்தும் எனலாம்.

மத்திய கிழக்கில் காசா பள்ளத்தாக்கில் இடம் பெறுகின்ற போர்க் குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் பிடியாணை பிடிக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலிய பிரதமரை வெள்ளைமாளிகை வரவேற்று விருந்தோம்புகிறது. காசாவில் தொடருகின்ற பாலஸ்தீன இனப்படுகொலைக்காக இஸ்ரேல் மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கும் தொடுக்கப்பட்டிருக்கிறது. பாலஸ்தீன இனப்படுகொலையை நிறுத்துவதற்கு இஸ் ரேலை நிர்ப்பந்திப்பதற்கான சகல வல்லமையும் இருக்கின்ற போதிலும், எதையும் செய்யாமல் நெதான்யாகுவை ட்ரம்ப் மேலும் உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

அமெரிக்க மண்ணில் இருந்துகொண்டு இந்தியாவுக்கு எதிராக அணுவாயுத எச்சரிக்கையை செய்வதற்கு ட்ரம்ப் அனுமதிப்பதை நோபல் கமிட்டி கவனத்தில் எடுக்க வேண்டும் என்று இந்திய அரசியல் அவதானிகள் கூறியிருக்கிறார்கள்.

இந்தியாவின் பிரபலமான பத்திரிகையாளர்களில் ஒருவரான சேஷாத்ரி ஷாரி நேற்றைய தினம் ' த பிறின்ற்' இணையத் தளத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

'சிந்து நதியில் இந்தியா அணையொன்றை கட்டுவதற்கு துணிச்சல் கொள்ளுமானால், அணுவாயுத தாக்குதலை நடத்தப்போவதாக பாகிஸ்தான் இராணுவ தளபதி பீல்ட் மார்ஷல் அசீம் முனீர் எச்சரிக்கை செய்திருக்கிறார். ட்ரம்ப் நிருவாகத்தின் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பலர் முன்னிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பது மிகவும் ஆபத்தானது.' பாகிஸ்தான் ஒரு அணுவாயுத நாடு. நாம் அழிந்துகொண்டு போகின்றோம் என்று நினைப்போமேயானால், புதுடில்லியிடமிருந்து எமது இருப்புக்கு அச்சுறுத்தல் வருமானல் உலகின் அரைவாசியை எம்முடன் கொண்டு போவோம்" என்று முனீர் கூறியிருக்கிறார்.

'இந்தியாவுக்கு எதிராக அமெரிக்க மண்ணில் இருந்துகொண்டு வெளிநாட்டு இராணுவ தளபதியொருவர் அணுவாயுத அச்சுறுத்தலை விடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். அத்தகைய பொறுப்பற்றதும் ஆபத்தானதுமான அச்சுறுத்தல் ஒன்று விடுக்கப்பட்டபோது ட்ரம்ப் நிருவாகம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கிறது. நோபல் சமாதானப் பரிசை வழங்கும் நோர்வேயின் நோபல் கமிட்டி இதை கவனத்தில் எடுக்க வேணடும். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்ததாக ட்ரம்ப் உரிமை கோருவதை முனீரின் அச்சுறுத்தலும் பொய்யாக்கியிருக்கிறது."

முதலாவது பதவிக் காலத்தில் இருந்து ட்ரம்ப் தன்னை சமாதானத்துக்கான ஒரு மனிதராக வர்ணித்து வந்திருக்கிறார். ஜிம்மி கார்ட்டருக்கு பிறகு எந்தவொரு அமெரிக்கப் படைவீரரையும் வெளிநாட்டு மோதலுக்கு அனுப்பி வைக்காத முதல் ஜனாதிபதி தானே என்றும் அவர் பெருமை பேசுகிறார். அமெரிக்க ஜனாதிபதியாக தான் இருந்திருந்தால் இஸ்ரேல் மீது 2023 அக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் இயக்கம் நடத்திய தாக்குதல் ஒருபோதும் இடம் பெற்றிருக்காது என்றும் அவர் கூறினார்.

ஆனால், கடந்த ஜனவரியில் மீண்டும் பதவிக்கு வந்தவுடன் டென்மார்க்கிற்கு சொந்தமான உலகின் மிகப்பெரிய தீவான கிறீன்லாந்தை அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்காக இராணுவ பலத்தைப் பயன்படுத்தும் சாத்தியத்தை நிராகராகரிக்க முடியாது என்று ட்ரம்ப் கூறினார். அத்துடன் பனாமா கால்வாயை அமெரிக்காவுக்கு சொந்தமாக்கப் போவதாக கூறிய அவர் அயல்நாடான கனடாவை அமெரிக்காவின் 51 வது மாநிலமாக்கும் யோசனை குறித்தும் பேசினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இனப்படுகொலைக்கு உள்ளாகியிருக்கும் பாலஸ்தீனர்களை காசாவில் இருந்து

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வழமையான நீதியா அல்லது நிலைமாறுகால நீதியா?

**ஜனாதிபதி திசாநாயக்க உறுதியளித்திருக்கும் சட்டத்தின் முன் சமத்துவமும் தலையிடாமையும் பரந்த ஒரு திட்டத்திற்குள் அடங்கியவையாக இருக்க வேணடியது அவசியம். குறிப்பாக, ஒரு நேரவரையறை தேவை.**



கலாநிதி ஜெகான் பெரேரா

பாராளுமன்றத்தில் கடந்தவாரம் உரையாற்றிய போது கடந்த காலத்தின் மனித உரிமை மீறல்களை எதிர்கொள்வதில் அரசாங்கத்தின் கடப்பாட்டை உறுதிப்படுத்திய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க, 'கடந்த காலத்தின் இந்த கவலைக்குரிய மரபுகளுக்கு வெளிப்படையாக, உறுதியாக, சகல சமூகங்களினதும் உணரவுகளைப் புரிந்துகொண்டு முகங்கொடுப்போம்" என்று கூறினார். பயங்கரவாத தடைச்சட்டத்தை பற்றி விசேடமாக குறிப்பிட்ட அவர், 'அது எமது வரலாறில் மிகவும் ஆபத்தான, பெரிதும் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட தேசிய பாதுகாப்பு சட்டமாகும்' என்று கூறினார்.

தமிழ் தீவிரவாத இயக்கத்தின் ஆரம்பக் கட்டங்களின் போது 37 வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட அந்த சட்டம் ஒரு தற்காலிக பாதுகாப்பு ஏற்பாட்டு நோக்கத்தையே கொண்டிருந்தது. ஆனால், இலங்கையின் ஆயுதமோதல் முடிவுக்கு வந்து 16 வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட, அது தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவதன் அவசியம் கேள்விக்கு உட்படுத்தப்படுவது சரியானதே. உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் பலவற்றின் பொதுவான அபிப்பிராயமும் அதுவாகவே இருக்கிறது.

ஒரு இளைஞர் குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படாமல் ஒன்பது மாதங்களாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து அந்த கேள்வி பெரும் கவனக்குவிப்புக்கு உள்ளானது. எந்த தவறையும் அந்த இளைஞன் செய்ததற்கான சான்று இல்லாத நிலையில் இறுதியில் விடுதலை செய்யப்பட்டான். அவன் செய்த ஒரே குற்றம் மத்திய கிழக்கில் காசாவில் இடம்பெறும் போர்க்குற்றங்கள் மீதான தனது சீற்றத்தை வெளிப்படுத்துவதற்காக இஸ்ரேலிய துணைத் தூதரகத்துக்கு அண்மையாக இஸ்ரேலுக்கு எதிரான ஸ்ரிக்கர் ஒன்றை ஒட்டியதும் இஸ்ரேலிய கொடி காலால் மிதிக்கப்படும் படம் ஒன்றை இன்ஸ்ரகிராமில் பதிவேற்றம் செய்தமையுமாகவே தெரிகிறது.

அவன் ஒரு முஸ்லிம் என்பதால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியவனாக அவனை தடுத்துவைத்த அதிகாரிகள் கருதியிருக்கிறார்கள். இது ஒரு உதிரிச் சம்பவம் அல்ல. பலர் குறிப்பாக, சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் விசாரணையோ அல்லது குற்றச்சாட்டோ இல்லாமல் நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்ட பெருவாரியான சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன.

உண்மையில், பயங்கரவாத தடைச்சட்டம் இன, மத சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராக அளவுக்கு ஒவ்வாத முறையில் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இது தேசிய முன்னேற்றத்துக்கு தொடர்ந்து இடையூறாக இருந்துவரும் ஆழமாக வேரூன்றிய அவநம்பிக்கையின் ஒரு அடையாளம்கும். பதவியில் இருந்த பல அரசாங்கங்கள் இந்த சமூகங்களை வெளிச்சக்திகளின் நலன்களுக்காக செயற்படுகின்ற ஐந்தாம் படைகளாக கருதி வந்திருக்கின்றன.

தனக்குள்ளேயே பிளவுபட்ட ஒரு நாடு முன்னேற்றம் காணமுடியாது. சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கை முன்னேற்றத்தை காணமுடியாமல் இருப்பதில் இருந்து இந்த உண்மையை புரிந்து கொள்ளமுடியும். இதை விளங்கிக்கொண்ட நிலையில், தற்போதைய அரசாங்கம் அழிவைத்தரும் அந்த சிந்தனையை கைவிடுவதற்கு உறுதி பூண்டிருக்கிறது. சட்டத்தின் கீழ் சகலரும் சமத்துவமாக நடத்தப்படுவர் என்று ஜனாதிபதி திசாநாயக்க சகல இனங்களையும் மதங்களையும் சேர்ந்த மக்களுக்கு வெளிப்படையாக உறுதியளித்திருக்கிறார்.

மனித உரிகைளை பாதுகாப்பது தொடர்பிலான ஜனாதிபதி திசாநாயக்கவின் பிரகடனம் பொருத்தமான நேரத்தில் வந்திருக்கிறது. ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் கூட்டத்தொடரில் இலங்கை 51-2 (2022) தீர்மானத்தை மீண்டும் ஒரு தடவை எதிர்நோக்கவிருப்பதற்கு முன்னதாக அவர் அந்த அறிவிப்பைச் செய்திருக்கிறார். 2011 ஆம் ஆண்டில் இருந்து மனித உரிமைகள் பேரவை இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரத்தை கண்டனம் செய்யும் தீர்மானங்களை அடுத்தடுத்து நிறைவேற்றி வந்திருக்கிறது. ஒவ்வொரு தீர்மானமும் இலங்கை மீது புதிய நிபந்தனைகளை விதித்திருக்கிறது.

2022 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் பேரவை ஒரு படி மேலே சென்று இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற மீறல்கள் தொடர்பில் தரவுகளைச் சேகரித்து, தனிப்பட்டவர்களை பொறுப்புக் கூறவைப்பதில் நாட்டம் கொண்ட எந்த அமைப்புக்கும் அவற்றை கிடைக்கச் செய்யும் பணியை முன்னெடுக்க ஜெனீவாவில் ஒரு விசேட கண்காணிப்பு பிரிவை நிறுவியது. இந்த ஏற்பாடு பொறுப்புக்கூறல் தொடர்பில் சர்வதேச சமூகத்துக்கு இருக்கும் அக்கறையை தெளிவாக வெளிக்காட்டுகிறது. ஆனால், ஐக்கிய இராச்சியமும் கனடாவும் முன்னின்று கொண்டு வரவிருக்கும் அடுத்த தீர்மானம் இலங்கையின் நிலைப்பாட்டை பெருமளவுக்கு விளங்கிக்கொண்டு அனுசரிக்கும் வகையிலானதாக இருப்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன.

காசாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் தொடர்பாக சர்வதேச சமூகம் ஒப்பீட்டளவில் மௌனம் சாதித்து வருகிறது. ஏனைய சர்வதேச நெருக்கடிகளை கையாளும் போது கடுமையான அணுகுமுறையை கடைப்பிடிப்பதை தவிர்த்து சர்வதேச சமூகம் மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கை மீது நெருக்குதல்களை பிரயோகிப்பதால் அசௌகரியமான ஒரு நிலை காணப்படுகிறது. இத்தகைய ஒரு சூழ்நிலை இந்த தடவை மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் கொண்டு வரப்படக்கூடிய தீர்மானம் கடுமை குறைந்ததாக இருக்கும் என்பதற்கு நம்பகமான காரணமாக இருக்கலாம்.

ஒழுங்கான முறையில் பிரயோகிக்கப்படாத மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைத்து இலங்கைக்கு எதிராக கடுமையான ஒரு தீர்மானத்துக்கு வாக்களிப்ப



தில் மேற்குலகைச் சாராத நாடுகளுக்கு பெரிதாக அக்கறை இல்லை.

மறுபுறத்தில், உள்நாட்டு விசாரணைகளின் பக்கச்சார்பான்மை மீது நம்பிக்கை இல்லை என்று கூறி தமிழ் அரசியல் கட்சிகளும் உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் சுயாதீனமான சர்வதேச விசாரணைவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

அதேவேளை, ஏற்கெனவே அறியப்பட்ட மனிதப்புதைகுழி பகுதிகளில் இருந்து தோண்டியெடுக்கப்படும் எலும்புக்கூடுகள் தேசிய நல்லிணக்கம் மீதான அரசாங்கத்தின் பற்றுறுதிக்கு ஒரு பரீட்சையாக அமைந்திருக்கின்றன. செம்மணியில் புதைகுழிகளை தோண்டும் நடவடிக்கைகள் தொடரும் நிலையில், சிறுவர்களின் எலும்புக்கூடுகள் உட்பட மேலதிக மனித எச்சங்கள் மீட்கப்படுகின்றன. செம்மணியில் மனித புதைகுழிகள் இருப்பது 1998 ஆம் ஆண்டில் இருந்தே தெரிந்த விடயமாகும். பாடசாலை மாணவியொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொலை செய்ததுடன் அவரைத் தேடிச் சென்ற உறவினர்களையும் கொலைசெய்ததாக படையினருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட இராணுவ அதிகாரிகள் அளித்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் செம்மணியில் பெரும் எண்ணிக்கையானோர் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக கூறியிருந்தனர்.

உண்மைக்கு முகங்கொடுப்பதை தவிர்ப்பதற்காக அரசாங்கங்கள் அந்த புதைகுழிகள் தொடர்பிலான விசாரணைகளை தடுத்தன அல்லது தாமதப்படுத்தின. இது தொடர்பான அக்கறைகளை கடந்தவாரம் ஜனா திபதி தனது பாராளுமன்ற உரையில் வெளிப்படுத்தினார். செம்மணி விசாரணையில் அரசாங்கம் தலையீட்டைச் செய்யப் போவதில்லை என்று மீண்டும் உறுதியளித்த ஜனாதிபதி, பொலிஸூம் சட்டமா அதிபர் திணைக்களமும் நீதித்துறையும் சுயாதீனமாகவும் வெளிப்டைத் தன்மையுடனும் நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கும் என்று கூறினார்.

ஆனால், முன்னாள் போர் வலயத்தில் உள்ள ஒரு மனிதப்புதைகுழி தொடர்பான விசாரணையை வழமையான ஒரு குற்றவியல் விசாரணையாக குறைத்துவிட முடியாது என்பது இங்கு ஒரு சிக்கலாகும். போர்க் காலக் குற்றங்களின் பெருங்கொடுமையும் அதன் விளைவான உணர்ச்சிக் கொந்தளிப்பான சமூக மற்றும் அரசியல் பின்புலமும் சாதாரண குற்றவியல் நீதிக்கு அப்பாலான செயன்முறையை வேண்டி நிற்கின்றன. அரச நிறுவனங்கள் நேரடியாக அல்லது இராணுவ கட்டமைப்புக்கள் ஊடாக இந்த குற்றங்களில் சம்பந்தப்படுத்தப்படும் போது இது குற்றவியல் நீதிக்கு அல்ல, நிலைமாறுகால நீதிக்கான விவகாரமாக மாறுகிறது.

நிறுவனங்கள் சம்பந்தப்படுகின்ற பாரிய மனித உரிமை மீறல்களை கையாளும் போது பாரம்பரிய நீதிநியாயாதிக்கம் போதுமானதாக இல்லாத பட்சத்தில் சமுதாயங்கள் கடைப்பிடிக்கின்ற பல்வேறு வழிமுறைகளை தழுவியதாக நிலைமாறுகால நீதி அமைகிறது. அவை குற்றவியல் வழக்கு தொடுத்தல், இழப்பீடு, நிறுவனச் சீர்திருத்தங்கள், நினைவேந்தல், மேலும் முக்கியமாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்கள் போன்ற உண்மை கண்டறியும் பொறிமுறைகளை உள்ளடக்கியதாக இருக்கும், ஆனால் அவற்றுடன் மட்டுப்ப டுத்தப்படுவதாக இருக்காது.

நிலைமாறுகால நீதி ஏன் அத்தியாவசியமானதாகிறது என்பதை இலங்கையின் அண்மைய வரலாறு உணர்த்துகிறது. செம்மணி குற்றங்களும் பரந்தளவிலான போர்க்கால மீறல்களும் இராணுவமயப்பட்ட ஆட்சிமுறையுடைய, சமூகங்களுக்கு இடையிலான அவநம்பிக்கை நிறைந்த, பலவீனமுடைய குழுக்கள் இலக்கு வைக்கப்படுகின்ற ஒரு சூழ்நி லையில் இடம் பெற்றவை. இந்த குற்றங்களின் அளவை யும் தன்மையையும் தனிப்பட்ட குற்றங்களை கையா ளுவதற்கென்று அமைக்கப்பட்ட நீதிமன்ற முறைமை ஒன்றினால் கையாளமுடியாது. சாதாரண முறையில் வழக்கு தொடுப்பதன் மூலம் குற்றங்களைச் செய்தவர்கள் சிலரைத் தண்டிப்பதில் வெற்றி காணலாம். ஆனால், முழு உண்மையையும் குற்றங்களுக்கு பரந்தளவில் பொறுப்புடையவர்களையும் கண்டுபிடிக்க முடியாது.

பாரம்பரியமான வழக்குத் தொடுத்தலுடன் மட்டுப்படுத்தப்படுகின்ற ஒரு பாதையை அரசாங்கம் தெரிவு செய்யுமானால், அது நிறைவற்ற ஒரு நீதியை வழங்கக்கூடிய ஒரு ஆபத்து இருக்கிறது. குற்றங்களைச் செம்தவர்களில் சிலர் தண்டிக்கப்படலாம், ஆனால், ஆழமான காயங்கள் தொடர்ந்தும் குணப்படுத்தப்படாமலே இருக்கும். நிறுவனங்களின் குறைபாடுகள் சீர்செய்யப்படாமலே இருக்கும். மீண்டும் அவநம்பிக்கை ஏற்படக்கூடிய சாத்தியங்கள் தொடர்ந்து நீடிக்கும்.

சட்டத்தின் முன் சமத்துவம் மீதான அரசாங்கத்தின் பற்றுறுதியும் விசாரணைகளில் தலையிடுவதில்லை என்ற அதன் நிலைப்பாடும் பாராட்டத்தக்கவை. ஆனால், இந்த உறுதிமொழிகள் நிலைமாறுகால நீதிக்கான பரந்தளவிலான, தெளிவான திட்டம் ஒன்றின் அங்கமாக அமைய வேண்டியது அவசியமாகும். நேரடி உத்தரவுகள் அல்லது தண்டனையின்மைக் கலாசாரத்தின் மூலமாக குற்றச் செயல்களில் அரச நிறுவனங்கள் சம்பந்தப்படுத்தப்படும் போது வழமையான நீதிமன்றங்கள் அந்த வழக்குகளை கையாள்வதன் மூலம் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியாது.

உண்மையில், அதை ஜனாதிபதியே கூறியிருக்கிறார். அத்தகைய ஒரு சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட மக்கள் நிறுவனங்களை சுயாதீனமற்றவை அல்லது துஷ்பிரயோகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆற்றல் இல்லாதவை என்றே கருதுவர். அதனால், சர்வதேச பங்கேற்புடன் கூடிய நிலைமாறுகால நீதிப் பொறிமுறை ஒன்றே முட்டுக் கட்டையை தகர்க்க உதவமுடியும்.

பழைய காயங்களை குணப்படுத்துதல் என்ற ஒரு பிரச்னையும் இருக்கிறது. விசாரணைகளினால் மாத்திரம் தரமுடியாததை உண்மையை கண்டறியும் செயன் முறையினால் தரமுடியும். துன்பங்களை பகிரங்கமாக ஒத்துக்கொள்வதும் கடந்த காலத்தைப் பற்றி பொதுவான புரிந்துணர்வை காண்பதுமே அதுவாகும். பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் பிரச்சினைகளை எடுத்துக்கூறுவதற்கு அனுமதிக்கப்படுவதுடன் சமூகங்கள் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்பவும் தொடங்கும்.

மெய்யான சுயாதீனத்தையும் தெளிவான ஆணையையும் பரந்தளவிலான பிரதிநிதித்துவத்தையும் கொண்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றின் மூலமாகவே அதைச் செய்யமுடியும். பாதிக்கப்பட்டவர்களும்

(14ஆம் பக்கம் பார்க்க்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தேர்தல் ஆணைய கூற்றின்படி தமிழரசு செயலர் பதவிப்பூசல் இதுவரை தீர்க்கப்படவில்லை!

பனங்காட்டான்

எங்கு பார்த்தாலும் எந்த ஒரு அரசியல் கட்சியும் தனித்து இயங்க முடியாத நிலையே இன்று காணப்படுகிறது. இதனால் அரசியல் கூட்டு என்பது பொதுவான ஒரு விடயமாக மாறிவிட்டது.

தெற்கில் அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தியை சரிக்க வலிமையில்லாத கட்சிகளையும் அமைப்புகளையும் இணைக்கும் முயற்சி முழும் சறுக்கும் நிலையில் காணப்படுகிறது. ரணிலும் சஜித்தும் இருக்கும்வரை இரு தரப்பும் இணைய மாட்டா. இன்னொரு கூட்டை உருவாக்கும் சக்தி மகிந்தவுக்கு இல்லை.

இதனால் ஏற்பட்டிருக்கும் இடைவெளியை கையகப்படுத்த முயற்சிக்கிறார் சிங்கள அரசியலில் முதுமை தட்டிய ஜி.எல்.பீரிஸ். பேராசிரியர் என்ற பெயரோடு சிறீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, பொது ஜன பெரமுன என எல்லாக் கட்சிகளிலும் ஏறி தேசியப்



பட்டியலூடாக அமைச்சர் பதவியைப் பெற்று அரசியலில் ருசி கண்ட பூனை இவர். இப்போது இவரும் ஒரு கூட்டு முயற்சியை முன்னெடுத்து சிங்கள அரசியலில் தம்மை ஒரு பீஷ்மராகக் காட்டுவதற்கு முயற்சி எடுக்கிறார்.

தமிழர் தரப்பில் சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் வெவ்வேறு திசைகளில் ஓடுகின்றன. தமிழர் விடுதலை கூட்டணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஜனநாயக தேசிய கூட்டமைப்பு என்ற தொடரில் தமிழ் தேசிய பேரவை ஒரு கூட்டாகியுள்ளது. இதற்குள் அரசியல் கட்சிகள் மட்டுமன்றி சமூக அமைப்புகளும் அடக்கம். தமிழரசு கட்சி தன்னை அழித்தாலும் பேரவையுடன் சேரத் தயாரில்லை. இங்கு கொள்கைப் பிரச்சனை எதுவுமில்லை. கஜனா, சுமாவா என்ற தலைமைப் போட்டிதான்.

ஜெனிவா மனித உரிமை பேரவை அறிக்கை சமர்ப்பிப்பதிலும் கூட ஒன்றுசேர முடியாது போனால் எப்போது அது சாத்தியமாகும்? மக்கள் மத்தியில் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி வரும் செல்வாக்கை நிமிர்த்த ஒரு கடையடைப்பை சுமந்திரன் அறிவித்துள்ளார். கட்சியின் பதில் தலைவரைத் தவிர கட்சிப் பிரமுகர்கள் வேறெவரும் இது விடயத்தில் இவருக்கு ஆதரவாக இறங்கியிருப்பதாகத் தெரியவில்லை.

ஏதாவது ஒன்றை, அது உண்ணா நோன்போ, சத்தியாக்கிரகமோ, கடையடைப்போ அறிவிக்கும் முன்னர் அதுபற்றி மக்களோடு ஆலோசிக்கப்பட வேண்டும். மற்றைய கட்சிகளோடு இணைந்து முன்னெடுக்க வேண்டும். அதன் பின்னரே காலமும் இடமும் தீர்மானிக்கப்பட வேண்டும். இந்த வழிமுறை கடையடைப்பு விடயத்தில் கவனிக்கப்படவில்லை. அதனால்தான் பதினைந்தாம் திகதி என அறிவித்துவிட்டு பதினெட்டாம் திகதிக்கு மாற்றப்பட நேர்ந்தது. பிற்பகல் நான்கு மணிக்கே முடிந்துவிடுமாம். எத்தனை மணிக்கு ஆரம்பிக்குமென சொல்லப்படவில்லை. அவரவர் விரும்பின நேரம் கடையைத் திறந்து மூடக்கூடிய விசித்திர போராட்டம்போல் தெரிகிறது.

கிளிநொச்சி எம்.பி. சிறீதரன் ஏற்பாட்டில் தொடரும் நூறு நாள் சமஷ்டி கோரிக்கைக்கு போட்டியாகவே சுமந்திரன் கடையடைப்பை அறிவித்ததாக சொல்லப்படுகிறது. வவுனியா வர்த்தக சங்கம் கைவிரித்துவிட்டது. கிளிநொச்சியும் அப்படியே போகலாம். யாழ்ப்பாணத்தில் இரண்டும் கலந்த காட்சி காணப்படுகிறது. கடையடைப்புப் போராட்டம் பிசுபிசுக்குமானால் இது கட்சியைப் பெரிதும் பாதிக்கும். தமிழரசு கட்சியின் மானம் கப்பலேற்றப்படும். அநுரவின் வடபகுதி அமைச்சராக விளங்கும் இராமலிங்கம் சந்திரசேகருக்கு நல்ல தீனி கிடைக்கும். மொத்தத்தில் தமிழ்த் தேசியமே அவமானப்பட நேரும்.

தமிழரசு கட்சியின் இப்போதைய நிலைமையை அரசியல் நோக்கர்கள் எவ்வாறு கூர்ந்து பார்க்கின்றனர் என்பதற்கு கடந்த ஒரு வாரத்துள் வெளியான சில விடயங்களை உதாரணமாக இங்கு பார்க்கலாம்:



**கடையடைப்புப் போராட்டத்தை அறிவிப்பதற்கு முன்னர் இதுபற்றி தாயகத்திலுள்ள வணிகர் அமைப்புகளுடன் ஆலோசிக்கப்பட்டதா? அவை ஆதரவு தெரிவித்தனவா? கடையடைப்புக்கு போதியளவு சாதகமான சூழல் இருப்பதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை. கட்சியின் பதில் தலைவரும் பதில் செயலாளரும் எடுக்கும் முடிவுகள் கட்சியை மேலும் இக்கட்டுக்குள் கொண்டு செல்லும் போலவே தெரிகிறது.**

- தமிழ் மிரர் வெளியீட்டில் கடந்த பதினோராம் திகதி வெளியான கட்டுரையின் தலைப்பு - ஒற்றுமையின்மையே தமிழரின் இயலாமை - என்பது. இக்கட்டுரையின் இறுதிப் பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது. 'ஈழத்தமிழர்கள் நீதிக்கான தமது போராட்டத்தில் அனைத்துலக அரங்கில் தமக்கு ஆதரவான சக்திகளைத் திரட்டிக் கொள்ளவும், ஈர்த்துக் கொள்ளவும் பரந்துபட்ட வேலைத் திட்டங்கள் இல்லாத நிலையில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடியவாறு நகர்ந்து சூழலில் தமிழர் தரப்பின் ஒற்றுமையின்மை மேலும் பயனற்ற எதிர்காலத்தையே கொண்டு வரும். இது தமிழரசு கட்சிக்கும் புரிய வேண்டும். இல்லாதுவிடின் மக்களால் புரிய வைக்கப்படுவதே நல்லது".

- வீரகேசரிப் பத்திரிகையில் கடந்த பத்தாம் திகதி வெளியான ஒரு கட்டுரையின் தலைப்பு - தமிழரசு நழுவ விட்ட வாய்ப்பு - என்பது. இக்கட்டுரையின் இறுதிப் பகுதி பின்வருமாறு உள்ளது. 'தமிழர்கள் எதிர்பார்க்கும் நீதி, பொறுப்புக்கூறல் என்பவை உறுதி செய்யப்படும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இவைகளின் பொறுப்புக்கூறல் விவகாரத்தை பாரப்படுத்துவதுதான் முழுமையான வெற்றி. அந்த வெற்றி கிடைக்கிறதோ இல்லையோ, அதற்கு உரிமை கோரக்கூடிய நிலையை தக்க வைத்துக் கொள்ள தமிழரசு கட்சி தவறி விட்டது என்பதே உண்மை'.

- கொழும்பிலிருந்து வெளிவரும் ஞானம் சஞ்சிகையின் ஆகஸ்ட் மாத இதழில் பேராசிரியர் துரை மனோகரன் தமது பத்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'முன்னொரு காலத்தில் தமிழ் மக்களுக்கென்று ஒரு வீடு இருந்தது. அந்த வீடு தங்களை எப்போதும் பாதுகாக்கும் என்று மக்கள் நம்பியிருந்தனர். அந்தோ பரிதாபம்! வீடு இன்று சின்னாபின்னமாகி சிதறிக் கிடக்கிறது. தலைமைத் தகைமைகள் எதுவுமற்ற ஒரு தலையாட்டிப் பொம்மை வீட்டின் முக்கிய பொறுப்பில் இருக்கிறது. சட்டம் தெரிந்த தந்திரசாலி கைப்பொம்மை போல பிறிதொருவர் இசைந்து நடக்கிறார். சமீபத்தில் வீட்டுக்காரர்கள் ஒருபோதும் சேரக்கூடாத ஒரு கூட்டத்தோடு சேர்ந்து கொஞ்சம் நஞ்சம் இருக்கிற மரியாதையையும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்".

மேற்குறிப்பிட்ட விடயங்களை எழுதிய மூவரும் தங்களுக்குள் உரையாடிவிட்டு எழுதியவையல்ல இவை. மூன்று ஊடகங்களும் வெவ்வேறு தளத்தில் வெளிவருபவை. மக்களின் மனவோட்டத்தைப் புரிந்து, தமிழரசின் போக்கை அறிந்து இவர்களால் எழுதப்பட்டவை. தமிழரசுக் கட்சி இந்த விமர்சனங்களை உள்வாங்கப் பழக வேண்டும்.

கட்சியின் பதில் செயலாளராகவிருந்த வவனியா சத்தியலிங்கத்தின் இடத்துக்கு நியமனமானவர் தம்மை பதில் செயலாளரென அழைக்காது செயலாளரென குறிப்பிடுமாறு ஊடகங்களுக்கு அறிவுறுத்துகிறார். சத்தியலிங்கம்



பதில் செயலாளராக இருந்தவரென்றால் அந்த இடத்தை நிரப்புபவரும் அவ்வாறே பதில் செயலாளரென அழைக்கப்பட வேண்டியவர். ஆனால், இப்போதைய புதிய பதில் செயலாளர் அதனை கௌரவக்குறைவாக நினைக்கிறார் போலும்.

இவர் தமது அசுரத்தனத்தைக் காட்ட அறிவித்துள்ள கடையடைப்பு தமிழரசு கட்சிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துமானால் அதன் பாதிப் பங்கு பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தையும் சாரும். இதனை அவர் நிச்சயமாகப் புரிந்திருப்பார். இதனையும் இயற்கையின் நியதி என்று சொல்ல மாட்டாரென நம்புவோம்.

இதனை எழுதிக் கொண்டிருக்கையில் சிலோன் ருடே பத்திரிகையின் ஆகஸ்ட் 9ம் திகதி வெளியீட்டில் இடம் பெற்ற முக்கியமான செய்தியொன்று கண்ணில்பட்டது. புதிதாக எழுபது அரசியல் கட்சிகள் தங்களை பதிவு செய்யுமாறு தேர்தல் ஆணையகத்துக்கு விண்ணப்பித்துள்ளதாக அதன் ஆணையாளர் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளதாக தலைப்பிட்டுள்ள இச்செய்தியின் நான்காம் பந்தி பின்வருமாறு உள்ளது:

"As of 2 June, six recognised political parties still had unresolved disputes over their general sccretaries, the election commission announced. These parties are the Ilankai Tamil Arasu Katchi (ITAK), United People Freedom Allaince (UPFA), United Lanka Podujana party, United Lanka Maha Sabha Party, Lanka Sama Samaja Party (LSSP), Sri Lanka Freedom Party (SLFP) and Sinhaleepa National Front."


யூன் இரண்டாம் திகதிய நிலைவரப்படி அங்கீகரிக்கப்பட்ட ஆறு அரசியல் கட்சிகளும் தங்கள் பொதுச் செயலாளர் தொடர்பான பூசலுக்கு தீர்வு காணவில்லை. இந்தக் கட்சிகளின் பட்டியலில் முதலாவதாக இலங்கை தமிழரசு கட்சி இடம்பெற்றுள்ளது. மற்றைய ஐந்து கட்சிகளின் பெயர்களையும் மேலுள்ள ஆங்கிலப் பந்தியில் படிக்கலாம்.

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி தமிழரசு கட்சியின் பொதுச்செயலாளர் பதவிப் பூசல் சட்டப்படி இதுவரை தீர்வு காணப்படவில்லையென்பது பகிரங்கமாகியுள்ளது. இந்த விண்ணாணத்தில் தமிழரசு கட்சியின் செயலாளர் தாமே என்று கூறி அறிக்கைகள் விடும் பதில் செயலாளர் எவ்வகையான பதவி ஆசையுடன் கட்சியை வழிநடத்துகிறார் என்பதை எவராலும் சொல்ல முடியாதுவிட்டால், கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் சிவஞானம் சிறீதரனாவது முன்வந்து மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். இது அவருக்கான காலத்தின் கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளங்களைக் காப்பாற்றுவது

நிலாந்தன்



சில நாட்களுக்கு முன் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரியான நந்தகுமார் முகநூலில் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். கமநல சேவைகள் திணைக்களத்தின் பொறுப்பில், யாழ்ப்பாணத்தில், ஏறக்குறைய ஆயிரம் குளங்கள் உண்டு என்றும், அவை கடந்த இரண்டு வருடங்களாக தூர் வாரப்படவில்லை என்றும் அடுத்த பருவ மழைக்கு முன் அவற்றை தூர் வார வேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதற்கு வேண்டிய நிபுணத்துவ உதவிகளை வழங்குவதற்கு துறைசார் பொறியியலாளர்கள் தயாராக இருப்பதாகவும் தெரிவித்த அவர், பிரதேச சபைகளும் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் உள்ள தன்னார்வலர்களும் குளங்களைத் தூர் வார்வதற்கு முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தார்.

அவர் ஏற்கனவே தான் பிறந்த கிராமத்தில் நான்கு குளங்களைத் தூர் வாரும் நடவடிக்கைகளையும், இரண்டு புதிய குளக் கட்டுகளைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்தவர். அவர் ஒரு மருத்துவர், ஆனால் தனது துறைக்கு வெளியே வந்து குடாநாட்டின் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்காக உழைக்கின்றார்.

குளங்களைப் பாதுகாப்பது என்பது தமிழ்ப் பண்பாட்டின் ஒரு பகுதியாக இருந்தது என்று பொறியியலாளர் சர்வா சர்வேந்திரன் கூறுகிறார். குளத்தைச் சுற்றி மருத, நெல்லி, நாவல், வேம்பு போன்ற மரங்களை வளர்த்த தமிழ் மக்கள், குளங்களுக்கு அருகே கடவுள் சிலைகளை வைத்து, குளத்துக்குப் புனிதத் தன்மையைக் கொடுத்து அதன்மூலம் குளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார்கள் என்றும் அவர் கூறுகிறார். குளத்தை மாசாக்கினால் அது தெய்வக் குற்றம் என்று பயப்படுமளவுக்கு குளத்தையும் கோவிலையும் பிணைத்துப் பராமரிக்கும் ஒரு பாரம்பரியம் தமிழ் மக்களிடம் இருந்தது என்றும் அவர் கூறுகிறார். அவ்வாறான குளக்கரைக் கோவில்களில் தீர்த்தத் திருவிழா என்பது பெரும்பாலும் மழைக்காலத்துக்கு முன்பு ஆனி தொடக்கம் புரட்டாதி வரையிலுமான மாதங்களில் வரும். தீர்த்த திருவிழாவுக்காக குளங்கள் தூர் வாரப்படும். இது வருடாவருடம் குளங்கள் தூர் வாரப்படுவதனை உறுதி செய்யும். தீர்த்தத் திருவிழா என்பது குளங்களைத் தூர்வாரும் ஒரு பண்பாட்டு நடவடிக்கை என்ற பொருள்பட சர்வா கூறுகிறார்.

ஊர்கள் தோறும் குளங்களை பராமரிப்பதற்கான ஒரு வாழ்க்கை முறையைக் கொண்டிருந்த தமிழர்கள் இப்பொழுது அதே குளங்களை மூடத் தொடங்கி விட்டார்களா? குளங்களுக்கு அருகே காணப்பட்ட கோவில்கள் பெருத்துக் கொண்டே போகின்றன. கோவில்களைப் புனரமைப்பதற்காக கோடி கோடியாக காசு கொட்டப்படுகிறது. குளத்துக்காகக் கோவில் என்றிருந்த நிலைமாறி கோவிலுக்காகக் குளம் என்ற நிலை உருவாகி விட்டது?

**ஒவ்வொரு உள்ளூராட்சி சபை உறுப்பினரும் தன் வட்டாரத்தில் எத்தனை குளங்களைப் புனரமைத்தார், பாதுகாத்தார், எத்தனை நீரோடும் வாய்க்கால்களைப் புனரமைத்தார் என்ற கணக்கை ஆண்டுதோறும் தன் வட்டார மக்களுக்கு காட்ட வேண்டும்.**

கடந்த வாரம் இப்பகுதியில் பாடசாலைகள் மூடப்படுவது பற்றி எழுதி இருந்தேன். பாடசாலைகள் மூடப்படுவதற்கு முன்னரே அதாவது நவீன யாழ்ப்பாணத்தை செதுக்கிய ஒரு கல்விச் சூழலை கட்டியெழுப்பிய பாடசாலைகள் திறக்கப்பட்ட ஒரு காலகட்டத்திலேயே குளங்கள் மூடப்பட்டன என்பதை அல்லது குளங்களை மூடுவது தொடர்பாக சிந்திக்கப்பட்டது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அண்மையில் வெளியிடப்பட்ட கட்டடப்படக் கலைஞர் மயூரநாதனின் யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு என்ற நூலில் அதுதொடர்பான தகவல்களைப் பெறமுடியும். கடந்த மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக குளங்களை மூடுவது தொடர்பான உரையாடல்கள் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன.

1697இல் யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தரின் கட்டளைத் தளபதியாக இருந்த ஹென்றிக் ஸ்வார்டெக்ரூன் தனது வழிகாட்டல் குறிப்பில், நிலத்தைப் பெறுவதற்காகக், நகரப் பகுதியில், ஆதரவற்ற பிள்ளைகள் தங்கியிருந்த இல்லத்துக்குப் பின்புறமிருந்த குளமொன்றை மூடுவது குறித்து ஆலோசனை வழங்கியுள்ளார். மேலும் கோட்டைக்கு அருகே பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய மேட்டுப்பகுதிகளை வெட்டி அந்த மண்ணை அருகே இருந்த குளங்களை மூடுவதற்குப் பயன்படுத்தலாம் என்ற கருத்தையும் முன்மொழிந்திருந்தார். அவருடைய முன்மொழிவுகள் அப்பொழுது ஏற்கப்படாவிட்டாலும் பின்னர் 1833-1867 வரையிலுமான காலப்பகுதிக்குள் அந்தக்குளம் மூடப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. அது தாராக் குளம் என்று அழைக்கப்பட்டது. 1863இல் திருக்குடும்பக் கன்னியர் மடத்தை விஸ்தரிப்பதற்காக மஞ்சள் கரைஞ்ச குளம் மூடப்பட்டிருக்கிறது. மேலும் பெயர் தெரியாத பல குளங்கள் பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டுள்ளன. 1867ஆம் ஆண்டுக்கு முன்னர் மூடப்பட்ட குளங்கள் பற்றிய தகவல்களை கொலரா ஆணைக் குழுவின் அறிக்கையில் காணமுடியும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மஞ்சள் கரைச்ச குளம், குசவன் குலம் போன்ற குளங்கள் மூடப்பட்டன. கொலரா ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பட்டங்கட்டிக் குளம் மூடப்பட்டது. 1877இல் வைத்தியசாலை வீதியை அண்டிருந்த வண்ணான் குளம் மூடப்பட்டது. மேற்படி தகவல்களை மயூரநாதனின் நூலில் காணலாம்.

அதாவது காலனித்துவ காலத்தில் இருந்து இன்றுவரையிலும் யாழ் நகரப் பகுதியில் வெவ்வேறு நோக்கங்களுக்காக குளங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதன் விளைவாக மழைக்காலங்களில் வெள்ளம் நகரத்துள் தேங்கி நிற்கின்றது.

ஒருபுறம் பள்ளிக்கூடங்கள் மூடப்படுகின்றன. இன்னொரு புறம் குளங்கள் மூடப்படுகின்றன. இப்படிப்பட்டதோர் பின்னணியில் குளங்களைத் தூர்வார வேண்டும் என்ற கோரிக்கை காலப் பொருத்தமானது. மகத்தானது.

புதிய பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு பின்னணியில் இது தொடர்பான விழிப்பை அதிகப்படுத்த வேண்டும். எல்லாப் பிரதேச சபைகளிலும் தூர்வார வேண்டிய குளங்களும், தூர்வார வேண்டிய வெள்ள வாய்க்கால்களும் உண்டு. அண்மையில் பேராசிரியர் சிறீஸ்கந்தராஜா தலைமையிலான குழுவினர் வழுக்கியாற்றின் தடங்களைப் பின்பற்றி ஒரு நீண்ட நடைப் பயணத்தை முன்னெடுத்தபொழுது அளவெட்டியில் பினாக்கைக் குளக்கரையில் தரித்து நின்று அப்பகுதி விவசாயிகளோடு உரையாடினார்கள். அதன்போது பினாக்கைக் குளத்தைச் சுற்றியுள்ள வயல்வெளிகளின் ஓரங்கள் குடியிருப்புகளாக மாறி வருவது மட்டுமல்ல குளத்துக்கு நீர் வரும் வாய்க்கால் ஓர் ஒழுங்கையாக மாற்றப்பட்டு விட்டதையும் கிராமவாசிகள் சுட்டிக் காட்டினார்கள். இவ்வாறு இப்பொழுது குளங்களுக்கு அருகே உள்ள அல்லது குளங்களை நோக்கி வரும் ஒரு பகுதி சிறிய வீதிகள் ஒரு காலம் குளத்துக்கு நீரைக் கொண்டு வரும் வாய்க்கால்களே என்று கிராமவாசிகள் கூறுகிறார்கள்.

புதிய உள்ளூராட்சி சபைகளுக்கு முன்னுள்ள பொறுப்புகளில் இதுவும் ஒன்று. குளங்களை நிலத்தடி நீரை ரீச்சார்ஜ் செய்வது. பயிர்பச்சைகளை விளைவிப்பது என்ற நோக்கு நிலைகளுக்கும் அப்பால் குளங்களையும், குளங்களைச் சுற்றியுள்ள சூழலையும் பொழுதுபோக்கு மையங்களாக மகிழ்ச்சி மையங்களாக மாற்றலாம்.

மணிவண்ணன் யாழ் நகர முதல்வராக இருந்த காலத்தில் ஆரிய குளத்தை அவ்வாறு சிந்தித்து மாற்றினார். எனினும் அப்பகுதி பொழுதுபோக்கிகளைக் கவரும் ஓரிடமாக இன்னமும் முழுவளர்ச்சி பெறவில்லை. ஆரியகுளம் இப்பொழுதும் பெருமளவுக்கு தனித்துவிடப்பட்டுள்ளது. அதற்கு அந்தக் குளம் அமைந்திருக்கும் அமைவிடம் ஒரு காரணமாக இருக்கலாம். அந்தக் குளத்தின் ஒரு பகுதி எல்லை பலாலி வீதி. அங்கேயும் எதிர்த் திசையில் நாக விகாரை. நாக விகாரைக்கு வருகின்ற சிங்கள மக்கள்கூட ஆரிய குளத்தைப் பெரிய அளவில் ரசிப்பதாகத் தெரியவில்லை. குளத்தின் ஏனைய இரண்டு எல்லைகள் மதில்களால் அடைக்கப்பட்டு இருக்கின்றன. குளத்தைச் சுற்றியுள்ள பகுதி இயற்கைக்குத் திறந்து விடப்பட்ட ஒரு பகுதியாக இல்லை. இதுபோன்ற பல காரணங்களினால் ஆரியகுளம் எதிர்பார்த்த அளவுக்கு மகிழ்ச்சி மையமாக வளர்ச்சி அடையவில்லை. பண்ணை கடற்கரையை நோக்கிவரும் அளவுக்கு, அல்லது பழைய பூங்காவில் ஒருமூலையில் உருவாக்கப்பட்டிருக்கும் புதிய பூங்காவை நோக்கிவரும் அளவுக்கு, மக்கள் ஆரிய குளத்தை நோக்கி வரவில்லை. இதில் பிரிட்டிஷ் கவுன்சிலுக்கு அருகே உள்ள குளம் ஒப்பீட்டளவில் சனப்புழக்கமாக உள்ளது. அதைச் சூழவுள்ள மரங்களும், வெளியும், இரவில் மங்கலான தெரு விளக்கின் ஒளியும் அதற்குக் கவர்ச்சியைக் கூட்டுகின்றன.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக மக்கள் செறிந்து வாழும் இடங்களில் உள்ள ஒரு பகுதி குளங்களுக்கு சாதி அடையாளம் உண்டு. நீர்வடியும் பள்ளமான பகுதிகளில் குடியேறும் ஒரு பகுதியினர் சாதி ரீதியாக தாழ்த்தப்பட்டவர்களாகவும் காணப்படுகிறார்கள். ஒரு காலம் யாழ்ப்பாணத்தில் சண்டியர்களை வாடகைக்கு எடுக்கும் பொழுது சில குறிப்பிட்ட குளங்களின் பெயர்களைச் செல்வார்கள். சில குற்றச் சம்பவங்களோடு குளங்களின் பெயர்களும் இணைக்கப்பட்டு உள்ளூரில் வாய்மொழிக் கதைகள் உண்டு. ஒரு பகுதி குளங்களைச் சுற்றியிருக்கும் இந்த சாதி அடையாளத்தை அகற்றி அவற்றை கவர்ச்சியான மகிழ்ச்சி மையங்களாக மாற்றும் விதத்தில் சிந்திக்க வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரான பா.அகிலன் கூறுவார், குளங்களை நினைவுக் குளங்களாக மாற்றலாம் என்று. அந்தந்த பகுதிகளில் இறந்த தியாகிகள், சமூகப் பெரியார்கள் போன்றவர்களின் பெயர்களைக் குளங்களுக்குச் சூட்டலாம். அல்லது குளங்களைச் சூழ உள்ள பகுதிகளில் இயற்கையை அழகாக்கி பூங்காக்களாகி அப்பகுதியை நினைவுப் பூங்காக்களாக பராமரிக்கலாம் என்றும் அவர் கூறுகிறார். அவை மகிழ்ச்சி மையங்களாகவும் இருக்கும். வரலாற்றை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு காவும் இடங்களாகவும் இருக்கும் நினைவுகளை அனுஷ்டிக்கும் இடங்களாகவும் இருக்கும்.

புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி சபைகள் உள்ளூர் வளங்களையும் புலம்பெயர்ந்த தமிழர்களின் வளங்களையும் பயன்படுத்தி குளங்களை மையமாகக் கொண்டு பசுமைத் திட்டங்களை உருவாக்க வேண்டும். புலம் பெயர்ந்த தமிழர்கள் நினைத்தால் தங்கள் தங்கள் ஊர்களில் குளங்களைத் தத்தெடுக்கலாம்.

எல்லா உள்ளூராட்சி சபைகளும் தங்களுக்கென்று சுற்றுச்சூழல் ஆலோசனைக் குழு ஒன்றை உருவாக்க வேண்டும். பருவ காலங்கள் தோறும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்குரிய திட்டங்களை வகுக்க வேண்டும். கமநல சேவைகள் திணைக்களம் மத்திய அரசாங்கத்தின் கீழ் வருகிறது. இதனால் அத்திணைக்களத்தின் கீழ்வரும் குளங்களைப் பராமரிப்பது தொடர்பில் உள்ளூராட்சி சபைகள் புதிய ஏற்பாடுகளைக் குறித்து சிந்திக்க வேண்டியிருக்கலாம். ஒவ்வொரு உள்ளூராட்சி சபை உறுப்பினரும் தன் வட்டாரத்தில் எத்தனை குளங்களைப் புனரமைத்தார், பாதுகாத்தார், எத்தனை நீரோடும் வாய்க்கால்களைப் புனரமைத்தார் என்ற கணக்கை ஆண்டுதோறும் தன் வட்டார மக்களுக்கு காட்ட வேண்டும். அது அவருடைய அரசியல் எதிர்காலத்துக்காக காட்டப்படும் ஒரு கணக்கு மட்டுமல்ல. அதைவிட முக்கியமாக அது அவருடைய தலைமுறைகளுக்காகக் காட்டப்படும் ஒரு கணக்கு. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹர்த்தால்: ஓர் இலகுவான அரசியல் வியாபாரம்



யதீந்திரா

முத்தையன் கட்டு மிகவும் பின் தங்கிய பகுதி. அப்பகுதியில் பாடசாலையில் படிப்பதற்கு மாணவர்கள் இல்லை. பெண் பிள்ளைகள் பூப்பெய்தியவுடன் திருமணம். கூலிவேலை, காட்டுப்பகுதியில் விறகு வெட்டுவது - இவைகள்தான் அப்பகுதியின் பிரதான தொழில்கள். யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்களாகிவிட்டது. அந்தப் பகுதியிலுள்ள மக்களின் வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்று எந்தவோர் அரசியல் தரப்பும் முயற்சிக்கவில்லை. ஆனால் அந்தப் பகுதியில் ஒருவர் உயிரிழந்தவுடன், முத்தையன் கட்டு இப்போது தமிழ்த் தேசிய பூமியாகிவிட்டது.

கிடைக்கும் தகவல்களின்படி, முத்தையன்கட்டில் நீண்டகாலமாக நிலைகொண்டிருந்த இராணுவ முகாம் விரைவில் அகற்றப்படவுள்ளது. ஏற்கனவே அங்கிருந்த இராணுவத்தின் பெரும்பகுதி வேறு இடத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டது. அந்த முகாமிலிருக்கும் பொருட்களுக்கான காவலாளிகளாக சில எண்ணிக்கையான இராணுவத்தினர் மட்டுமே அங்கிருக்கின்றனர். முகாமின் பொருட்கள் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறித்த இராணுவ முகாம் நீண்டகாலமாக நிலைகொண்டிருப்பதால் அப்பகுதியிலுள்ள மக்களும் இராணுவத்தினருடன் நெருக்கிப் பழகிவருகின்றனர். இந்த அடிப்படையில் அப்பகுதியிலுள்ள இளைஞர்கள் சிலர் இராணு சிப்பாய்களுடன் தாராளமாக பழகிவருகின்றனர். இவ் வாறானதொரு பின்புலத்தில்தான் குறித்த சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

முத்தையன் கட்டைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர், இரவு நேரத்தில் இராணுவ முகாமிலிருந்த சில பொருட்களை களவாக ஏற்ற முற்பட்ட போது, கடமையிலிருந்த இராணுவச் சிப்பாய்கள்கள் தாக்கியிருக்கின்றனர். அவர்களிடமிருந்து தப்பியோடும் முயற்சியில் குளத்திற்குள் குதித்ததன் காரணமாக ஒருவர் இறந்திருக்கின்றார். இராணுவ முகாமிலிருந்து பொருட்களை ஏற்ற முற்பட்டால், அதனைப் பார்த்துக் கொண்டு இராணுவத்தினர் சும்மா இருப்பார்களா என்பது முதல் கேள்வி. ஒரு வேளை குறித்த இளைஞர் தாக்குதலினால் குளத்திற்குள் நீந்த முடியாமல் மூழ்கியுமிருக்கலாம்.

இதற்குத்தான் தற்போது ஹர்த்தால் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. வடக்கு கிழக்கில் இராணுவ பிரசன்னம் தொடர்பில் ஆரம்பத்தில் அதிகம் பேசப்பட்டிருக்கின்றது. சம்பந்தன், அவரது நாடாளுமன்ற உரைகளில் இது பற்றி பல தடவைகள் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அதே போன்று வெளிநாட்டு ராஜதந்திரிகளிடம் இது தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இதன் தொடர்சியாக சில முகாம்கள் அகற்றப்பட்டிருக்கின்றன. இந்த விடயத்தில் இன்னும் அதிக மாற்றங்கள் தேவை என்றால் அது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் பேசிப் பார்க்கலாம். ஜனாதிபதியுடன் பிரத்தியேக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கலாம் ஆனால் இராணுவ முகாம் ஒன்றில் பொருட்களை களவாக ஏற்ற முற்பட்டவர்களை ஆதாரமாகக் கொண்டு, இராணுவ பிரசன்னத்தை எதிர்ப்பதாக கூறுவது முற்றிலும் தவறானது. உதாரணமாக வீதியால் சென்ற ஒரு பெண்ணை வழிமறித்து, இராணுவத்தினர் தவறாக நடந்திருந்தால் அல்லது இளைஞர் ஒருவர் தமிழர் என்னும் காரணத்திற்காக மட்டும் தாக்கப்பட்டிருந்தால், நிச்சயம் இராணுவ பிரசன்னத்தை எதிர்ப்பதில் பொருளிருந்திருக்கும் ஆனால் இங்கோ காரணமும் தவறு, அதற்காக முன்வைக்கப்படும் வாதமும் தவறானது.

இந்த விடயத்தை எவர் முன்னெடுக்கின்றார் என்னும் விடயம் இந்தக் கட்டுரையாளருக்கு முக்கியமானதல்ல. எவர் இவ்வாறான விடயத்தை செய்தாலும், அதன் சமூகப் பெறுமதி பற்றியே நாம் ஆராய வேண்டும். விடயங்களை இரண்டு வகையில் நோக்கலாம். ஒன்று அறிவுரீதியாக நோக்குவது இரண்டு, பொதுப் புரிதலிருந்து அறிய முற்படுவது. ஆங்கிலத்தில் இதனை கொமன் சென்ஸ் என்பார்கள். ஈழத் தமிழரின் அரசியல் பயணத்தை எடுத்து நோக்கினால் முதலில் மிதவாத வழிமுறை, பின்னர் ஆயுத வழிமுறை என்னுமடிப்படையில் விடயங்கள் கையாளப்பட்டன. தற்போதுள்ள அரசியல் சூழல் இரண்டு அணுமுறைகளினதும் தோல்விக்கு பின்னரான காலகட்டமாகும்.




எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையிலான தமிழரசு கட்சியின் காலத்தில் ஹர்த்தால் என்பது ஒரு எதிர்ப்பு அரசியல் நடவடிக்கையாக கையாளப்பட்டிருந்தது. ஆனால் அன்றைய சூழலில் கூட ஜனநயாக தமிழ் தலைவர்கள் எவரும் சாத்வீக அரசியலை உச்சநிலைக்கு கொண்டு செல்லவில்லை. உணவு தவிர்ப்பு நடவடிக்கையின் மூலம் ஒரு தமிழ் தலைவர் உயிரிழந்த வரலாறு இல்லை. ஒரு பானைச் சோற்றுக்கு, ஒரு சோறு பதம் என்பது போல், மேற்படி உதாரணம் தமிழ் தலைவர்களின் அன்றைய சாத்வீகப் போராட்டத்திலிருந்த போதைமைக்கு தெளிவான சான்றாகும்.

ஒரு வேளை அன்றைய சூழலில் சாத்வீகப் போராட்டங்களின் போது ஒரு தமிழ் தலைவர் உயிரிழந்திருந்தால், அன்றைய சூழலில் மக்கள் எழுச்சிக்கான காரணமாக அது இருந்திருக்கலாம். இந்தியாவில், ஆந்திர தேசக் (மானில) கோரிக்கையை முன்வைத்து பொட்டி சிறிராமுலு என்பவர், 56 நாட்கள் தொடர் உணவு தவிர்ப்பை மேற்கொண்டு உயிரிழந்தார். அதன் மூலம் ஏற்பட்ட மக்கள் எழுச்சியைத் தொடர்ந்தே ஆந்திரக் கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டது. அதுவே பின்னர் இந்தியாவின் மொழிவாரி மானில முறைமையாக மாற்றமடைந்தது. ஆனால் பொட்டி சிறிராமுலு போன்று, தியாகத்தைச் செய்வதற்கான அர்பணிப்புள்ள தமிழ் தலைவர் எவரும் அன்றைய தமிழரசு கட்சியில் இருந்திருக்கவில்லை.

தமிழ் அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரையில் அர்பணிப்பை மக்களிடம் எதிர்பார்த்தார்களே தவிர, தங்களை உச்சமாக அர்பணிக்கத் தயாராக இருந்திருக்கவில்லை. வக்கில் தொழிலும் வேண்டும், நாடாளுமன்ற கதிரைகளும் வேண்டும் என்னுமடிப்படையில்தான் இருந்தனர். இப்போது அந்த நிலைமை முன்னரைவிடவும் படு மோசமாகிவிட்டது. முன்னர் இருந்தவர்களிடம் நேர்மையாவது இருந்தது. தமிழர் அரசியல் ஆயுத இயக்கமாக மாற்றமடைந்த பின்னர்தான் தங்களை தியாகம் செய்வதற்கு ஒரு தலைமுறை வெளியில் வந்தது. அந்தத் தியாகங்களும், இறுதியில் விழலுக்கிறைத்த நீரானது. அது தொடர்பில் அதிகம் பேசுவதில் இனிப் பயனில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் நீங்கள் உங்களுக்குள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி, ஒரு நாள் கடைகளை பூட்டி, மறுநாள் திறப்பதால், தமிழர் அரசியலில் எதைச் சாதித்துவிட முடியும்? ஒரு வேளை வடக்கு கிழக்கில் கடைகள் பூட்டப்பட்டன என்னும் செய்தியைக் கொண்டு, தமிழ் மக்கள் தமிழரசு கட்சியுடன்தான் இருக்கின்றனர் என்னும் பிரச்சாரத்தை மேற்கொள்ளலாம். இதற்கப்பால் ஹர்த்தால் என்பது ஒரு நாள் கூத்தாகவே முடிவுறும். தமிழ் மக்கள் தங்களின் கொமன் சென்ஸ் கொண்டு கேட்க வேண்டிய கேள்வி, இவ்வாறான ஒரு நாள் கூத்துக்களால் கடந்த பதினாறு வருடங்களில் ஏதாவது உருப்படியாக நடந்திருக்கின்றதா?

**“ வடக்கு கிழக்கில் கடைகளை பூட்டினால் ஒரு நாள் வியாபாரம் பாதிக்கப்படும், அதன் நஷ்டம் முழுவதும் கடைகளை பூட்டுபவர்களுக்கு மட்டும்தான். அநுரகுமாரவுக்கோ ஹரினி அமரசூரியவுக்கோ, பிமல் ரத்நாயக்கவுக்கோ எந்தவொரு நஷ்டமும் ஏற்படப் போவதில்லை.**

அரசியல்வாதிகள் தங்களின் கட்சி நலன்களுக்காக எதனையும் கூறலாம் - அவர்களை ஆதரிப்பவர்கள் எவ்வாறான நியாயங்களையும் கூறலாம். ஆனால் சமானிய மக்களை நோக்கிச் சிந்திப்பார்கள் தங்களுக்குள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி, காலாவதியாகிப் போன இவ்வாறான அணுகுமுறைகளால் என்ன பயன்? இன்னொரு விடயத்தையும் நீங்கள் நோக்க வேண்டும். வடக்கு கிழக்கில் இடம்பெறும் இவ்வாறான அடையாள எதிர்ப்புக்களை தென்னிலங்கை ஒரு விடயமாகவே எடுத்துக் கொள்வதில்லை.

ஏன் அப்படி? வடக்கு கிழக்கு அடிப்படையில் ஒரு தொழில்துறை பகுதியல்ல. தொழில்துறைப் பகுதிகள் மக்களால் முடக்கப்படும் போது நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்படும். அவ்வாறான சூழலில் அரசாங்கம் போராட்டக் காரர்களுடன் பேசுவதற்கு இறங்கிவரும். கடந்த பதினாறு வருடங்களில் தமிழ் பகுதிகளில் பல விடயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. எழுக தமிழ் தொடங்கி பொத்துவில் தொடங்கி பொலிகண்டி என்னும் பெயரிலான நிகழ்வு வரையில் எதிர்ப்புக்கள் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறான நடவடிக்கைகளின் பின்னர் கொழும்பின் ஆட்சியாளர்கள் தமிழ் கட்சிகளுடன் பேசுவதற்காக இறங்கி வந்திருக்கின்றார்களா? கடந்த பதினாறு வருடங்களில் ஒப்பீட்டடிப்படையில் அதிகமானவர்கள் திரண்ட ஒரு நிகழ்வு என்றால், பொத்துவில் தொடங்கி பொலி கண்டி நிகழ்வை குறிப்பிடலாம் - அதிகமானவர்கள் கும்பலோடு கும்பலாக இணைந்திருந்தனர் ஆனால் அதனைக் கூட தென்னிலங்கை ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை. கொஞ்சமாவது கொமன் சென்சை பயன்படுத்தினால் இதற்கான பதில் இலகுவானது. கொழும்பின் அதிகார பீடம் உங்களை திரும்பியே பார்க்கவில்லை என்றால் இது போன்ற நடவடிக்கைகளை எதற்காக செய்ய வேண்டும்.

வடக்கு கிழக்கில் கடைகளை பூட்டினால் ஒரு நாள் வியாபாரம் பாதிக்கப்படும், அதன் நஸ்டம் முழுவதும் கடைகளை பூட்டுபவர்களுக்கு மட்டும்தான். அனுரகுமாரவிற்கோ ஹரினி அமர சூரியவிற்கோ, பிமல் ரத்நாயக்கவிற்கோ எந்தவொரு நஸ்டமும் ஏற்படப் போவதில்லை. இதனை இன்னும் இலகுவாக புரிந்து கொள்வதற்காக முன்னர் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை சொல்கின்றேன் - அப்போது அரசியல் கைதிகள் என்போர், அவர்களின் விடுதலையை வலியுறுத்தி, சிறைக்குள் உணவு தவிர்ப்பை மேற்கொண்டனர். இது தொடர்பில் அப்போது வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த சி.வி.விக்கினேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரியுடன் பேசினார், மைத்திரி கூறியது -அவர்களிடம் சொல்லுங்கள். அவர்கள் சாப்பிடாமல் இருந்தால் அவர்கள்தான் செத்துப் போவார்கள்.

ஹர்த்தால் என்பது, வீதிகளில் சிலர் கூடி காட்போட் மட்டைகளை உயர்த்திக் கொண்டிருப்பது - இவ்வாறான நடவடிக்கைகளால் சில அரசியல்வாதிகள் பயன்படலாம். அடுத்த தேர்தலில் தங்களின் வாக்கு வங்கியை அதிகரிப்பதற்கு இவ்வாறான விடயங்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் ஒரு சமுதாயத்தில் சிந்திக்கும் தரப்பாக இருப்பவர்கள் தங்களுக்குள் கேட்க வேண்டிய கேள்வியோ, மக்கள் பற்றியதாக இருக்க வேண்டும். தங்களை படித்தவர்களாக எண்ணிக் கொள்பவர்கள், பாமரர்களை ஏமாற்ற முற்படும் போதெல்லாம், பாமரர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள இருக்கின்ற ஒரேயொரு ஆயுதம் அவர்களின் கொமன் சென்ஸ் மட்டும்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தின் அடுத்த முதலமைச்சராகிறாரா நடிகர் விஜய்?



- நியூசிலாந்து சிற்சபேசன்

தமிழ்நாடு சட்டமன்றத்துக்கான தேர்தல், 2026ம் ஆண்டின் நடுப்பகுதியில் எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால், தேர்தல் முஸ்தீபுகள் ஆரம்பமாகிவிட்டன.

ஆளும் திராவிட முன்னேற்றக் கழகம், மக்கள்நலத் திட்டங்களை வேகப்படுத்துகின்றது. பிரதமர் மோடி தமிழக மக்களின் மனங்களில் சிம்மாசனத்தைத் தேடத்தொடங்கிவிட்டார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பல்வேறு அணிகள், பாட்டாளி மக்கள் கட்சி போன்றவை கூட்டணிக் கனவுகளுடன் வலம்வருகின்றன. நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியைப் பிடிக்கப்போவதான பிரமையை ஏற்படுத்துகின்றது.

பொதுவாக, தமிழக அரசியலில் இரண்டு பலமான தரப்புக்கள் காணப்படுவதுண்டு.

தேசியக் கட்சியான காங்கிரசும், மறுவளத்தில் நீதிக்கட்சியும் என இரண்டு வலுவான தரப்புக்கள், 20ம் நூற்றாண்டின் ஆரம்பங்களிலே, காணப்பட்டன. 1967ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைப் பிடித்தபோது, தேசியக் கட்சியான காங்கிரஸ் வலுவிழக்க ஆரம்பித்தது. அதன்பின்னரான ஒரு தசாப்தத்திலே, இரண்டாவது பெரிய கட்சியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ச்சியடைந்தது. 1977ல் எம்ஜிஆர் முதலமைச்சரானார். 1987ல் மறைந்தார். 1991ல் ஜெயலலிதா முதலமைச்சரானார். 2016ல் ஜெயலிதாவும், 2018ல் கலைஞரும் மறைந்தனர்.

எம்ஜிஆர், கலைஞர், ஜெயலலிதா காலகட்டங்களிலே இரண்டு பலமான அணிகள் காணப்பட்டன. எம்ஜிஆர் - ஜெயலிலதாவுக்குப் பின்னர் தெளிவான தலைமை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஏற்படவில்லை. அதேசமயத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் வலுவாகக் காணப்படுகின்றது.

கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டுமல்லவா. ஆனால், தமிழக அரசியலில் வலுவான எதிர்த்தரப்பைக் காண முடியவில்லை.

அண்ணா திமுக ஏற்படுத்திய வெற்றிடத்தையே மோடி இலக்கு வைக்கின்றார். அதுவே நடிகர் விஜய்யின் இலக்கு என்றும் சொல்லலாம்.

தேர்தல் வரும்போதெல்லாம், தமிழ்ச் சொந்தங்களைத் தேடி மோடி ஓடோடி வருகின்றார். தமிழின் அருமை பெருமைகளைச் சொல்கின்றார். தமிழரின் வரலாற்றைப் பேசுகின்றார். ஆனாலும், மோடி மந்திரம் பலிக்குதில்லை. 2024 பாராளுமன்றத் தேர்தலிலே, ஒரு தொகுதியைக்கூட வெல்ல முடியவில்லை. தமிழ்நாடு எப்போதுமே தனித்துவமானது.

ஒருகாலத்தில், காங்கிரஸ் கட்சியே இந்தியாவெங்கும் கோலோச்சியது. அப்போதுகூட, தென்னிந்தியா தனித்து - விழித்து - துணிந்து செயற்பட்டது. சென்னை மாகாணத்திலே, நீதிக்கட்சியே வலுவானதாகக் காணப்பட்டது. அதனுடைய தொடர்ச்சியே திராவிட அரசியலாகும்.

ஆக, வடநாட்டின் ஆதிக்கத்தை தடுப்பதற்கான ஒற்றைப்புள்ளியில், காலாதிகாலமாகவே, தென்னாடு ஒன்றுகூடுகின்றது. அதுவே அரசியலின் மைய விசையாகும். அதற்கே மதச்சார்பின்மை, சமூகநீதி போன்ற சித்தாந்தமூலம் பூசப்படுகின்றது. அதனை பாமரமக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கே பெரியார் - அம்பேத்கார் வழித்துணையாகின்றனர்.

இத்தகைய பண்புகளைக் கொண்ட திராவிடக் கூடாரத்திலே, நுழைய முற் படுகின்ற தரப்பாகவே, நடிகர் விஜய் யின், தமிழக வெற்றிக் கழகத்தையும் கருத முடிகின்றது.

தமிழக வெற்றிக் கழகம், 2024 பிப்ரவரி 2ல் பூர்வாங்கமாக ஆரம்பமா கியது. சினிமாவில் வாய்ப்புத் தேடி, எழும்பூர் ரயில் நிலை யத்தில், தினசரி நூற்றுக்கணக்கானோர் வந்துசேர்கின்றனர். பலர், சினிமாவிலே சேர்ந்துவிடுகின்றனர். சிலர், உச்சமும் தொட்டுவிடுகின்றனர். அதன்பின்னர், முதலமைச்சராக விரும்பு கின்றனர். அதற்கு எம்ஜிஆரே வழி காட்டியாகும். எம்ஜிஆரைப் பார்த்து அரசியலுக்கு வந்தோரின் வரிசை நீளமா னது. அதிலே நடிகர் விஜய் லேட் டஸ்ட்.

சுமார் 85,000 வரையான ரசிகர் மன்றங்களையும், அவை ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 25வரையான உறுப்பினர்களையும் நடிகர் விஜய் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அத்தகையவொரு மக்கள் பலத்தின் அடிப்படையிலே ஆரம்பிக்கப்பட்டதே தமிழக வெற்றிக் கழகமாகும்.

கொள்கை ரீதியாக, திராவிடக் கட்சகளின் நிலைப்பாட்டையே நடிகர் விஜய் வரித்துக்கொள்வதாகவே கருத முடிகினறது. பெரியார் ஈவே இராமசாமி நாயக்கரின் ஜனன தினத்திலே, சென்னை வேப்பேரியிலுள்ள பெரியார் திடலில், நடிகர் விஜய், மலரஞ்சலி செலுத்திய மையைக்கூட ஒரு சமிக்ஞையாகவே கருதலாம்.

வட தமிழ்நாட்டின் விக்கிரவாண்டியிலே, 2024 அக்டோபரிலே, விஜய்யினுடைய முதலாவது கட்சி மகாநாடு நடைபெற்றது. அதிலே, எட்டு இலட்சம் வரையானவர்கள் கலந்துகொண்டதாகச் சொல்லப்படுகின்றது. ஆகஸ்ட்டில் மற்றுமொரு மகாநாடு மதுரையில் நடைபெறவுள்ளது. அதனூடாக, தென் தமிழ்நாட்டிலுள்ள ஆதரவைக் காண்பிக்க உள்ளதாகவும் சொல்லப்படுகின்றது. எதுஎப்படியாகிலும், 2026 சட்ட மன்றத் தேர்தல் களத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி தெளிவான முன்னிலையில் காணப்படுகின்றது. நடிகர் விஜய் தரப்பு, வாக்கு சதவிகித எண்ணிகையில் கவனிக்கப்படுகின்ற தரப்பாகலாம். ஆனால், சதவிகித எண்ணிக்கை என்பதனை, வெற்றிபெறுகின்ற தொகுதிகளின் எண்ணிக்கையாக மாற்ற முடியுமா என்பதே மிகப்பெரிய கேள்வியாகும்.

ஒரு எடுத்துக்காட்டாகச் சொல்வதெனில், இரண்டு திராவிடக் கட்சிகளுமே ஓரளவு சமமான வாக்குப் பலத்தை இதுகாறும் கொண்டிருந்தன.

2021 சட்டமன்றத் தேர்தலிலே, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு 37 சதவிகித வாக்குகளும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு 33 சதவிகித வாக்குகளும் கிடைத்தன.

அதுவே தொகுதி எண்ணிக்கை என்னும்போது, திமுகவுக்கு 133 தொகுதிகள் கிடைத்தன. ஆனால், அண்ணா திமுகவிற்கு 66 தொகுதிகள் மட்டுமே கிடைத்தன.

இன்னுமொருவளமாகச் சொன்னால், அண்ணளவாக 1சதவிகித வாக்குகளை 2021 சட்டமன்றத் தேர்தலிலே இடதுசாரிகள் பெற்றன. தலா இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றன. அதே சமயத்தில், 6 சதவிகித வாக்குகளைப் பெற்ற நாம் தமிழர் கட்சியினால் ஒரு தொகுதியிலே கூட வெற்றிபெற முடியவில்லை.

ஆக, வாக்கு சதவிகிதத்தை அதிகரிப்பதென்பது இந்திய தேர்தல் முறையில், உடனடி, பெறுமதியற்றதாகும். எத்தனை தொகுதிகளைக் கைப்பற்றமுடியும் என்பதே வெற்றியைத் தீர்மானிக்க அவசியமாகும்.

அந்தவகையிலே, தமிழக அரசியலிலே கவனிக்கப்படக்கூடிய தரப்பாக, 2026 சட்டமன்றத் தேர்தலிலே, நடிகர் விஜய் வரலாம். ஆனால், தமிழகத்தின் அடுத்த முதலமைச்சர் என்பதெல்லாம் அதீதமான கற்பனையாகும்.

# ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் முன்னோடி அறிக்கை வெளியானது!

அ.நிக்ஸன்

ஜெனீவா மனித உரிமைச் சபை ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையின் 12 திகிதியிட்ட பதிப்பிக்கப்பட்டிராத முன்னோடிப் பிரதி ஒன்று புதன்கிழமை அவரது அலுவலகத்தின் இணையத்தளத்தில் வெளியாகியுள்ளது.

இந்தப் பிரதி ஏற்கனவே இலங்கை அரசாங்கத்திடம் அதிகாரபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ள அறிக்கையின் பிரதியாகும்.

இதற்கேற்ப இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள திட்டம் எதிர்வரும் நாட்களில் அல்லது வாரங்களில் தெரிய வரும்.

ஆணையாளரின் 16 பக்க அறிக்கையின் தொனிப்பொருள் என்ன என்பதைப் பார்க்கும் போது ஒரு விடயம் தெளிவாகப் புரிகிறது.

அதாவது, 2015 ஆம் ஆண்டு அப்போதைய ரணில் - மைத்திரி அரசாங்கம் அமெரிக்காவோடு இணைந்து ஜெனீவா மனித உரிமைச் சபையில் நிறைவேற்றிய 301 தீர்மானம் போன்ற ஒரு நிலைமை 60 ஆம் கூட்டத்தொடரில் மீண்டும் நிறைவேற்றப்படுவதற்கான நிகழ்தகவு, பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் 2025 இல் ஏற்படலாம் என்ற கற்பிதம் தொனிக்கிறது.

ஜேவிபி என்பிபி எனப்படும் புதிய அரசாங்கத்தின் மீது அனைத்து மக்களும் நம்பிக்கை வைத்துள்ளனர் என்ற அடிப்படையில் பொறுப்புக் கூறல் விவகாரம் முழுவதையும் இலங்கையிடம் இருந்தே ஆணையாளர் எதிர்பார்க்கிறார்.

இது வடக்கில் என்.பி.பி எனப்படும் ஜேவிபிக்கு வாக்களிக்கும் நிலைக்கு மக்களை தமிழ்த் தேசியக் கட்சிகள் இட்டுச் சென்றதன் நேரடி விளைவு ஆகும்.

அத்துடன் ஐசிசி எனப்படும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை இயல்பாகவே இணைவது நல்லது என்ற கோணத்திலும், இலங்கை கடந்தகால குற்றங்களில் இருந்து விடுபடுவதற்கான ஒரு வாய்ப்பாக புதிய முன்னேற்றங்கள் அமையும் என்ற வியூகத்திலும் அறிக்கையின் உள்ளடக்கம் பொதிந்துள்ளது.

**2015ஆம் ஆண்டு போன்று 2025 இலும் அதே நகர்வு...!**
**அநுர அரசாங்கம் மீது நம்பிக்கை...!**
**உள்ளக விசாரணைக்கே முன்னுரிமை...!**
**தமிழர் விவகாரம் பத்தோடு பதினொன்றாக மாறியது...!**
**ஐ.சி.சியில் இலங்கை இணைந்தால் பழைய குற்றங்கள் கைவிடப்படும்...!**

இலங்கை செய்ய வேண்டிய பொறுப்புக் கூறல்கள் தொடர்பாக சிறிய சிறிய விடயதானங்கள் அடங்கிய பரிந்துரைகள் இம்முறை எண்ணுக்கணக்கில் அதிகளவாக அறிக்கையின் முடிவுரையில் காணப்படுகின்றன.

ஆனால், கடந்தகால அறிக்கைகளிற் பலவற்றில் குறைந்த எண்ணுக்கணக்கில் ஆனால் கடுமையான விடயதானங்கள் கையாளப்பட்டிருந்தது போன்று இம்முறை அனுப்பப்பட்டுள்ள அறிக்கை அமையவில்லை.

மாறாக புதிய அரசாங்கத்தின் மீது ஒரு மென்போக்கையே அது வெளிப்படுத்துகின்றது.

ஏற்கனவே 46-1 தீர்மானத்தை இலங்கை நிராகரித்திருந்தது. எந்த ஒரு பரிந்துரைகளும் இலங்கையினால் நடைமுறைப்படுத்தப்படவுமில்லை.

அதன் பின்னர் தீர்மானிக்கப்பட்ட அலுவலகப் பொறிமுறை எனப்படும் ஒஸ்லாப் திட்டத்தைக்கூட இலங்கை உரிய முறையில் செயற்படுத்தவில்லை.

புதிய அரசாங்கம் என ஆணையாளர் நம்புகின்ற அநுர தலைமையிலான நிர்வாகம், பதவியேற்று ஒரு வருடமாகும் நிலையிலும், ஜெனிவாவின் எந்த ஒரு பரிந்துரைகளிலும் கவனம் செலுத்தப்படவில்லை. ஆகவே, புதிய அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை ஆணையாளர் எந்தப் புள்ளியில் இருந்து வெளிப்படுத்துகிறார் என்ற கேள்வி எழுகிறது!

பொது நியாயாதிக்கம் எனப்படும் விசாரணை முறை கூட பயனற்றது. அதாவது போர்க்குற்றவாளி எனப்படும் நபர் வெளிநாடுகளுக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் அங்கு வைத்து விசாரணை நடத்துவது. இத் திட்டம் சர்வதேச விசாரணை முறையும் அல்ல. ஆனால் இத் திட்டம் பற்றிய நம்பிக்கையை ஆணையாளர் பிரஸ்தாபித்துள்ளார்.

இதன் காரண - காரியமாவே பொது நியாயாதிக்கம் என்பதை தமிழர்கள் தமது கோரிக்கையாக முன்வைக்கக் கூடாது என்ற கருத்துருவாக்கம் தமிழ்ப் பரப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

2015 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்க காலத்தில் நிலைமாறுகால நீதி என்று மார் தட்டி நம்பி எதுவுமே நடக்காத ஒரு பின்னணியில், எந்த அடிப்படையில் 2025 ஆம் ஆண்டிலும் புதிய அரசாங்கம் என்று ஆணையாளர் சித்தரித்து நம்பிக்கை வைக்கிறார்?

போர்க்குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்றும், அதற்கான சர்வதேச விசாரணைகள் எனவும் முன்னைய அறிக்கைகளில் மிகக் கடுமையாகச் சுட்டிக்காட்டிருந்தனர்.

ஆனால், இம்முறை மனித உரிமை மீறல்கள் தொடருகின்றன என்ற கருத்தையும், பொறுப்புக்கூறலுக்கு இதுவரை இலங்கை ஒத்துழைக்காவிடினும், இனியாவது ஒத்துழைக்கவேண்டும் என்பது போலவும் பயங்கரவாத தடைச் சட்டம் இதுவரை நீக்கப்படாமை பற்றியும் ஆங்காங்கே எடுத்தியம்பும் இந்த அறிக்கை பற்பல சிறிதும் பெரிதுமான குற்றச்சாட்டுகளை மாத்திரம் அறிக்கையில் முன்வைக்கிறது.

ஈழத்தமிழர்கள் மீதான இன அழிப்புக்கான சர்வதேச நீதி பற்றிய தெளிவான பரிந்துரைகள் அறிக்கையில் இல்லை. விசேடமாக, இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணையை கோருவதாகத் தமிழ்த் தேசிய பேரவை கூறியிருந்த போதும், அந்த விடயங்கள் அல்லது தமிழ்த் தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூக அமைப்புகள் இணைந்து கடிதம் அனுப்பியமை தொடர்பான எந்த ஒரு பதிவும் அறிக்கையில் இல்லை.

அது ஏற்கனவே ஆணையாளர் அனுப்பியிருந்த பதிலோடு கரைந்து போய்விட்டது போலும். உண்மையில்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிரம்ப்-புட்டின் அலாஸ்கா பேச்சுவார்த்தை:



## உக்ரைன் போர் முடிவுற சாத்தியமா?

**இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உக்ரைன் போரல், ஐரோப்பாவில் மிகப்பெரிய இடம்பெயர்வு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஐ.நா.வின் கூற்றுப்படி, சுமார் 10 மில்லியன் உக்ரேனியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 3.7 மில்லியன் மக்கள் உக்ரைனுக்குள் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர், அதே நேரத்தில் 6.9 மில்லியன் மக்கள் அகதிகளாக வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர்.**

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் வெள்ளிக்கிழமை அலாஸ்காவில் சந்திப்பானது, உக்ரைனில் மூன்று ஆண்டுகால போரை முடிவுக்குக் கொண்டுவர முயல்கிறது.

ரஷ்யாவுக்கு சொந்தமான அலாஸ்காவை 1867ஆம் ஆண்டில் அமெரிக்கா வாங்கியது. 1959இல் அமெரிக்க மாகாணங்களில் ஒன்றாக மாறிய ரஷ்யாவின் பழைய நகரம் ஒன்றில் சந்திப்பு என்பதால், இந்த சந்திப்பை சரித்திர முக்கியத்துவம் பெறச் செய்துள்ளது.

தற்போது ரஷ்யா உக்ரைனின் சுமார் இருபது சதவீத நிலப்பரப்பைக் கட்டுப்படுத்துகிறது. 2022இல் ரஷ்யா இணைத்த லுஹான்ஸ்க், டொனெட்ஸ்க், சபோரிஷியா மற்றும் கெர்சன் பகுதிகளை முழுமையாகக் கட்டுப்படுத்த விரும்புகிறது.

ஆனாலும் இரு தலைவர்களும் நில பரிமாற்றம் பற்றி விவாதிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது ஆக்கிரமித்துள்ள உக்ரைன் பிரதேசத்தில் சிலவற்றை ரஷ்யா கட்டுப்படுத்தும் ஒரு ஒப்பந்தத்தை ட்ரம்ப் ஆதரிக்கக்கூடும்.

ரஷ்யா உக்ரைனின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துள்ளது. அவர்கள் முக்கிய பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ளனர். அந்தப் பிரதேசத்தில் சிலவற்றை உக்ரைனுக்குத் திரும்பப் பெற நாங்கள் முயற்சிப்போம் என்றார் ட்ரம்ப்.

இப் பேச்சுவார்த்தையில் உக்ரைன் தற்போது கட்டுப்பாட்டில் உள்ள சில நிலங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கலாம் என்பதையும் அறிவுறுத்துகிறது.

உக்ரைன் ஜனாதிபதி விலோடிமிர் ஜெலென்ஸ்கி, தங்கள் நிலத்தை ரஷ்யாவிற்கு விட்டுக்கொடுப்பது தொடர்பான எந்தவொரு ஒப்பந்தமும் தோல்வியடையும் என்று பலமுறை கூறியுள்ளார்.

உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, அலாஸ்கா கூட்டத்தில் கலந்துகொள்வது சந்தேகம் என்றே தெரிகிறது. ஆனால் அமெரிக்க அதிபர்அவர் கலந்துக் கொள்ளலாம் என்று கூறி உள்ளார்.

அலாஸ்காவில் புட்டினை சந்தித்த பிறகு, தான் அழைக்கும் முதல் நபர் ஜெலென்ஸ்கியாகவே இருப்பார் என்று ட்ரம்ப் கூறியுள்ளார். புட்டினுடனான நேரடி சந்திப்புக்கு முன்னதாக, ஆகஸ்ட் 13இல் ட்ரம்பும் ஜெலன்ஸ்கியும் மெய்நிகர் முறையில் சந்தித்துப் பேசினர்.

ட்ரம்ப், புட்டின், மற்றும் ஜெலன்ஸ்கி என மூன்று தலைவர்களும் கலந்துகொள்ளும் முத்தரப்பு சந்திப்பை நடத்த ட்ரம்ப் தயாராக இருப்பதாக வெள்ளை மாளிகை முன்பு கூறியிருந்தது. ஆனால், அலாஸ்காவில் ஜெலன்ஸ்கியை விலக்க வேண்டும் என்று புட்டின் கோரியிருந்தார்.

உக்ரேனின் ஈடுபாடு இல்லாமல் மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஒப்பந்தமும் 'உயிரற்ற முடிவுகளுக்கு" சமமானதாக இருக்கும் என்று ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

ஆனாலும் புட்டின் - ட்ரம்ப் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராகும் போது ரஷ்யா உக்ரைனை கடுமையாக தற்போது தாக்கி வருகிறது என களமுனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யா உக்ரைனுடனான சண்டையை ஐம்பது நாட்களுக்குள் நிறுத்தாவிட்டால் கடுமையான தடைகள் விதிக்கப்படும் என்று ட்ரம்ப் முன்னதாக எச்சரித்தார். அந்தக் காலக்கெடு இப்போது கடந்துவிட்டது. மேலும் புதிய நடவடிக்கைகள் எதுவும் மாஸ்கோவைத் தாக்கவில்லை. ஆனால் ரஷ்யாவிலிருந்து எண்ணெய் தொடர்ந்து வாங்கியதற்காக இந்தியாவை தண்டிக்க அமெரிக்கா அதன் மீது 50 சதவீத வரிகளை விதித்துள்ளமை அறிந்ததே.

ஆனால் ரஷ்ய எரிசக்தி சொத்துக்களை வாங்கும் பிற நாடுகள் மீது அமெரிக்கா மேலும் வரிகளை விதிப்பதைத் தவிர்க்க, வெள்ளிக்கிழமை போர் நிறுத்தத்திற்கு புட்டின் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று ட்ரம்ப் கோரியுள்ளார்.




2022 இல் ரஷ்யா இணைத்த லுஹான்ஸ்க், டொனெட்ஸ்க், சபோரிஷியா மற்றும் கெர்சன் உள்ளிட்ட உக்ரைனின் கிழக்குப் பகுதிகளின் முழு கட்டுப்பாட்டையும், 2014 இல் அது இணைத்த கிரிமியாவையும் தக்க வைக்க விரும்புவதாக புட்டின் கூறியுள்ளார்.

அலாஸ்கா பேச்சுவார்த்தையை கீவ் அரசு ஒப்புக் கொண்டால், சமீபத்திய சண்டையின் பெரும்பகுதி குவிந்துள்ள லுஹான்ஸ்க் மற்றும் டொனெட்ஸ்க் பகுதிகளிலிருந்து உக்ரேனிய துருப்புக்களை திரும்பப் பெற வேண்டியிருக்கும்.




### உக்ரைன் பிரதேசத்தை விட்டுக் கொடுக்குமா?

ஆகஸ்ட் 8இல் அமெரிக்க மற்றும் ரஷ்ய அதிகாரிகள் போரை நிறுத்தும் ஒரு ஒப்பந்தத்தை நோக்கிச் செயல்பட்டு வருவதாகவும், மாஸ்கோ தான் கைப்பற்றிய பிரதேசத்தை வைத்திருக்க அனுமதிக்கும் என்றும் ப்ளூாம் பெர்க் செய்தி வெளியிட்டிருந்தது.

மேலும் உக்ரைன் ஒரு நடுநிலை நாடாக இருக்க வேண்டும் என்று புட்டின் தொடர்ந்து கோரி வருகிறார். நேட்டோவில் சேருவதற்கான அதன் லட்சியங்களைக் கைவிடவும் புட்டின் தெரிவித்துள்ளார்.

2022இலும் அதற்கு முன்பு, 2014 இலும் உக்ரைன் இழந்த நிலத்தை விட்டுக்கொடுக்க கீவ் அரசு அனுமதி அளிக்காது. ரஷ்யாவிற்கு நிலத்தை 'பரிசு' செய்ய மாட்டேன் என்றும், உக்ரேனியர்கள் தங்கள் நிலத்தை ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்களுக்கு விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்றும் ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.

மேலும் எந்தவொரு பிரதேசத்தையும் விட்டுக்கொடுப்பது உக்ரைன் அரசியலமைப்பின் கீழ் சட்டவிரோதமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா உக்ரைனின் நிலத்தில் ஐந்தில் ஒரு பங்கை, 114,500 சதுர கிமீ கைப்பற்றி உள்ளது. கார்கிவ், லுஹான்ஸ்க், டோனெட்ஸ்க், சபோரிஷியா மற்றும் கெர்சன் பகுதிகள் வழியாக சுமார் 1,000 கிமீ வரை எல்லை நீண்டுள்ளது. ரஷ்யா சபோரிஷியா மற்றும் கெர்சன் பகுதிகளில் முக்கால்வாசி பகுதியைக் கட்டுப்படுத்துகிறது.

உக்ரைனின் கார்கிவ், சுமி, [illegible] மற்றும் டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் பகுதிகளின் சிறிய பகுதிகள் ரஷ்ய ஆதிக்கத்தின கீழ் உள்ளன. சுமி மற்றும் கார்கிவ் பகுதிகளில், ரஷ்யா சுமார் 400 சதுர கிமீ நிலப்பரப்பைக் கட்டுப்படுத்துகிறது. டினிப்ரோபெட்ரோவ்ஸ்கில், ரஷ்யா எல்லைக்கு அருகில் ஒரு சிறிய பகுதியைக் கைப்பற்றியுள்ளது.

லுஹான்ஸ்க் மற்றும் டான்பாஸ் பிரதேசத்தில் சுமார் 46,570 சதுர கிமீ அல்லது 88 சதவீதத்தை ரஷ்யா கட்டுப்படுத்துகிறது. ரஷ்யா கிட்டத்தட்ட லுஹான்ஸ்க் மற்றும் டோனெட்ஸ்கின் முக்கால் பகுதியை ஆக்கிரமித்துள்ளது.

உக்ரைன் இன்னும் டான்பாஸின் சுமார் 6,600 சதுர கிமீ பகுதியை மட்டுமே கொண்டுள்ளது, இருப்பினும் ரஷ்யா அதன் பெரும்பாலான ஆற்றலை டொனெட்ஸ்கில் முன்னணியில் குவித்து வருகிறது. அதன் கட்டுப்பாட்டில் இல்லாத கடைசி முக்கிய நகரங்களை நோக்கி இராணுவத்தை நகர்த்துகிறது.

### களத்தில் ரஷ்ய முன்னேற்றம்:

இம்மாத ஆகஸ்ட்டில் ரஷ்யப் படைகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றுள்ளன. தென்மேற்கிலிருந்து கைப்பற்றும் முயற்சிகளை தீவிரப்படுத்தியதால், முன்னணி வரிசைகளுக்கு அப்பால் சுமார் 10 கிமீ முன்னேறி, டோரெட்ஸ்க் மற்றும் கிழக்கு போக்ரோவ்ஸ்க் திசைகளில் படைகளைக் குவித்தன. களத்தில் மெதுவாக இந்த மோதலில் வெற்றி பெறுகிறது. இருப்பினும் பெரும் விலை கொடுக்கப்படுகிறது.


அத்துடன் உக்ரைனை சுற்றி வளைக்கும் அபாயத்தில் உள்ளது. உக்ரைன் ஆழமாக தற்காப்பு நிலைகளை உருவாக்கவில்லை என்றால், ரஷ்யப் படைகள் திறந்த நாட்டிற்குள் நுழையும் திறனைப் பெறும். இது உக்ரைனுக்கு மிகவும் ஆபத்தான நேரம். அவர்கள் கூர்ஸ்கில் அவர்கள் கைப்பற்றிய அனைத்து ரஷ்ய பிரதேசங்களையும் இழந்துவிட்டார்கள் என்பது பெரும் பின்னடைவாகும்.

2022 போரின் ஆரம்ப வாரங்களில், ரஷ்யா வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கிலிருந்து முன்னேறி, உக்ரேனிய பிரதேசத்தின் பரந்த பகுதிகளை விரைவாகக் கைப்பற்றியது. இர்பின், புச்சா மற்றும் மரியுபோலில் கடுமையான போர் தொடங்கியது.

பிந்தைய மே 2022 இல் ரஷ்யப் படைகளிடம் வீழ்ந்தது. மரியுபோல் முற்றுகை போரின் மிகவும் கொடிய மற்றும் மிகவும் அழிவுகரமான போர்களில் ஒன்றாகும். உக்ரேனிய அதிகாரிகள் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இறப்புகளை மதிப்பிட்டனர்.

மார்ச் 2022இல், ரஷ்யப் படைகள் ஐரோப்பாவின் மிகப்பெரிய சபோரிஜியா அணுமின் நிலையத்தைக் கைப்பற்றின. மேலும் அந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் ரஷ்யா உக்ரைனின் 27 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியது.

ஆனால் 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், கார்கிவ் மற்றும் கெர்சனில் பெரிய எதிர் தாக்குதல்கள் மூலம் உக்ரைன் நிலைமையை மாற்றியது. போர்த் தரவுகளின் படி, போரின் தொடக்கத்திலிருந்து ரஷ்யா கைப்பற்றிய நிலத்தில் 54 சதவீதத்தை உக்ரைன் மீட்டெடுத்தது. இது ரஷ்ய ஆக்கிரமிப்பு நிலத்தை நாட்டின் 18 சதவீதமாகக் குறைத்தது.



ஆகஸ்ட் 2024இல், உக்ரைன் ஒரு குறிப்பிடத்தக்க ஊடுருவலைத் தொடங்கியது. ரஷ்யாவின் கூர்ஸ்க் பிராந்தியத்திற்குள், மோதலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை ஏற்படுத்தியது. இந்தத் தாக்குதலில் உக்ரேனியப் படைகள் ரஷ்ய எல்லைக்குள் சுமார் 10 கிமீ முன்னேறி, மதிப்பிடப்பட்ட 250 சதுர கிமீ நிலப்பரப்பைக் கைப்பற்றின. ஆனால் இவை அனைத்தும் ரஷ்யாவால் மீண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 2025 ஆம் ஆண்டு வரையிலும், போர் ஒரு முட்டுக்கட்டையை ஏற்படுத்தியது. இரு தரப்பினரும் பெரும் இழப்புகளைச் சந்தித்தனர். இருப்பினும், ஸ்லோவியன்ஸ்க் நோக்கித் தள்ளப்படும் ரஷ்யாவின் சமீபத்திய ஊடுருவல்கள், வரலாற்று ரீதியாக அது கைப்பற்ற போராடிய நிலத்தை மீண்டும் தாக்குவதற்கான சாத்தியக்கூறுகளைக் குறிக்கின்றன.

2022 ஆம் ஆண்டு உக்ரைன் மீதான ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பிற்கு முன்பு, ரஷ்யா கிரிமியாவை கைப்பற்றி வைத்திருந்தது, அதனை 2014 இல் ரஷ்யாவுடன் இணைத்ததும் அறிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் விளையாட்டு கலாசாரத்தை உருவாக்கும் திட்டம் தயாரிக்க வேண்டும்



கொழும்பு, ஓக. 17

நாட்டில் விளையாட்டு கலாசாரத்தை உருவாக்குதல், விளையாட்டுடன் தொடர்புள்ள உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் அவசியம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு தொடர்பான 2025 வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் பயன்பாடு குறித்த மீளாய்வு மற்றும் 2026 ஆம் ஆண்டு தொடர்பான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் குறித்த பூர்வாங்க கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை காலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

இதில், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் உள்ள 08 நிறுவனங்களுக்கு 2025 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அது தொடர்பான திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து தனித்தனியாக மீளாய்வு செய்யப்பட்டது.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை உட்பட அனைத்துத் துறைகளின் முன்னேற்றத்துக்காக முறையான வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாததே இதுவரை காணப்பட்ட பிரச்னை என்றும் கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் அனைத்துத் துறைகளுக்கும் தேவையான நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், அவை முறையாக குறித்த திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருப்பது தொடர்பில் திருப்தியடைய முடியாது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அந்த நிதி ஒதுக்கீடுகளை உரிய நிதியாண்டிற்குள் முறையாக நிறைவு செய்து மக்களுக்கு நன்மைகளை வழங்குவது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

நாட்டில் விளையாட்டு கலாசாரத்தை உருவாக்குதல், விளையாட்டுடன் தொடர்புள்ள உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், சர்வதேச அளவில் திறமையான வீரர்களை அடையாளம் காணும் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் வீரர்களை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டு 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பதன் முக்கியத்துவம் குறித்து ஜனாதிபதி இந்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தினார்.

இதன்போது விளையாட்டு கலாசாரத்தை உருவாக்குவதற்கான திட்டத்தைத் தயாரிக்குமாறு அறிவுறுத்திய ஜனாதிபதி, விளையாட்டுகளை ஊக்குவிப்பதில் விளையாட்டு சங்கங்களின் அதிகபட்ச பங்களிப்பைப் பெறவும், அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கவும் அறிவுறுத்தினார். இந்த நோக்கத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்வது விளையாட்டை வளர்ச்சிக்கு மட்டுமன்றி, நாட்டின் ஆரோக்கியம், சமூக நலன், குற்றங்களைக் குறைத்தல், போதைப் பொருள் பாவனையில் இருந்து மீட்டல், கூட்டு முயற்சியை உருவாக்குதல் மற்றும் துடிப்பான தொழில்படையை உருவாக்குதல் போன்ற பல நோக்கங்களை ஒரே நேரத்தில் அடையும் முதலீடாகும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

விளையாட்டுத் துறையில் ஆற்றல் மட்டும் போதாது என்றும், இந்த யுகத்தில் பயிற்சி மற்றும் தொழில்நுட்பம் மிக முக்கியமான காரணிகளாகும் என்றும், எனவே, வீரர்களுக்குத் தேவையான வாய்ப்புகளை வழங்குவது விளையாட்டு அமைச்சின் முன்னுரிமைப் பணியாகும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

தற்பொழுது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சுகததாஸ விளையாட்டரங்கு மற்றும் கிளிநொச்சி மற்றும் மன்னார் உள்ளிட்ட நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் விளையாட்டு அரங்குகளின் புதுப்பித்தல் மற்றும் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (எ)

## கிடைக்காது என்று தெரிந்திருந்தும்...

வேறு நாடுகளுக்கு அனுப்பிவிட்டு அந்த பள்ளத்தாக்கை அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் உல்லாசக் கடற்கரையாக்கப் போவதாகவும் அவர் கூறினார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் சுமுகமான உறவுகளை வளர்த்துக்கொள்வதன் மூலமாக உக்ரெயின் போரை முடிவுக்கு கொண்டு வரமுடியும் என்ற தவறான நம்பிக்கையில் ட்ரம்ப் உக்ரெயின் ஜனாதிபதி வொலாடிமிர் செலன்ஸ்கியை வெள்ளை மாளிகைக்கு அழைத்து மிரட்டினார். அதேவேளை, ஐம்பது நாட்களில் போர் நிறுத்தத்துக்கு புட்டின் இணங்கவில்லையானால், ரஷ்யாவுக்கு எதிராக 100 சதவீத வரியை விதிக்கப்போவதாக அவர் அச்சுறுத்தினார்.

ஆனால், இறுதியில் தற்போது புட்டினுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை தவிர ட்ரம்புக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை. உக்ரெயினில் பிராந்தியங்களை சொந்தமாக்கிக் கொள்வதற்கான ரஷ்யாவின் விருப்பத்துக்கு அவர் இணங்கிவிடுவார் என்று ஐரோப்பிய நாடுகள் அஞ்சுகின்றன. புவிசார் அரசியல் நிலைவரம் பற்றிய சரியான தெளிவு இல்லாதவராக, உக்ரெயின் போருக்கு தனது நிபந்தனைகளின் அடிப்படையில் முடிவைக் காண்பதில் நாட்டம் கொண்டிருக்கும் ட்ரம்ப், செலன்ஸ்கியை தனது விருப்பு வெறுப்புக்கு ஏற்றமுறையில் கையாளலாம் என்று நம்புகிறார்.

இது இவ்வாறிருக்க, உலகளாவிய ரீதியில் ட்ரம்ப் தொடுத்திருக்கும் வரிப்போர் சர்வதேச வர்த்தக உறவுகளில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பின்தங்கிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள நாடுகள் வேறு வழியின்றி அவரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ற முறையில் செயற்பட நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இலங்கையும் அத்தகைய ஆபத்துக்கு உள்ளாகியிருக்கிறது. வரிவிதிப்பை அவர் அமெரிக்க ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான புவிசார் அரசியல் அதிகாரமாக பயன்படுத்துகிறார்.

இலங்கை மீதான வரி தொடர்பாக அமெரிக்கா எடுத்த தீர்மானம் வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்துடன் மாத்திரமல்ல, முழுமையான இருதரப்பு உறவுகளுடனும் சம்பந்தப்பட்டது என்று அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு எழுதிய கடிதத்தில் ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தார். பொருளாதார வல்லமை கொண்ட இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் பிரேசில் போன்ற நாடுகளையும் வரிவிதிப்பைக் காட்டி பயமுறுத்த அவர் முயற்சிக்கின்றார்.

தனது இரண்டாவது பதவிக்காலத்தின் முதல் எட்டு மாதங்களில் அமெரிக்க ஜனாதிபதி கடைப்பிடித்த அணுகுமுறைகள் சட்டத்தின் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்கை குழப்பத்துக்கு உள்ளாக்கியிருக்கின்றன. ஈரானுடன் அணுத்திட்டங்கள் தொடர்பாக அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த வேளையிலேயே அந்த நாட்டின் அணு மையங்கள் மீது குண்டுவீச்சுக்களை நடந்துவதற்கு ட்ரம்ப் உத்தரவிட்டார்.

ஒபாமாவுக்கு பதினாறு வருடங்களுக்கு முன்னர் நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டபோது 'எதற்காக அவர் அந்த பரிசைப் பெற்றார் என்று எனக்கு தெரியவில்லை " என்று ட்ரம்ப் கேலி செய்தார். எதைச் சாதித்துவிட்டதற்காக ட்ரம்ப் தனக்கு சமாதானப் பரிசைப் பெறுவதற்கான தகுதி இருப்பதாக நம்புகிறார் என்று முழு உலகமுமே இப்போது கேட்கிறது.

தனது மத்தியஸ்த முயற்சிகளின் மூலமாக முடிவுக்கு கொண்டு வந்திருப்பதாக ட்ரம்ப் பெருமையாக உரிமை கோரும் எந்தவொரு மோதலுமே மீண்டும் வெடிக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. முழு உலகினதும் மனச்சாட்சியை உலுக்கிக் கொண்டிருக்கும் காசா அவலத்துக்கு முடிவுகட்ட இஸ்ரேலை வழிக்கு கொண்டுவருவதற்கு உருப்படியாக ட்ரம்ப் எதையாவது செய்தால், அவரின் நோபல் சமாதான பரிசு ஆசையில் ஓரளவு அர்த்தம் இருக்க முடியும்.

பட்டினி கிடக்கும் பாலஸ்தீனர்கள் உணவைப் பெறுவதற்கு நிவாரண நிலையங்களுக்கு வருகின்றபோது குழந்தைகள், பெண்கள், வயோதிபர் என்று எந்த வேறுபாடும் இல்லாமல் இஸ்ரேலியப் படைகளினால் தினமும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், இஸ்ரேலிய சியோனிச அரசின் காவலனாக நிற்கும் ட்ரம்ப் சமாதான பரிசுக்கு எந்தவிதமான அருகதையும் இல்லாதவர். இப்போது மாத்திரமல்ல , ஏற்கெனவேயும் பல தடவைகள் அவர் அந்த பரிசுக்கு தனக்கு கிடைக்கவில்லை என்று முறையிட்டிருந்தார். ஆனால், அது தனக்கு கிடைக்காது என்பதும் ட்ரம்புக்கு தெரியும். தான் எதைச் செய்தாலும் தனக்கு சமாதானப் பரிசை தரமாட்டார்கள் என்று தனது சமூக ஊடகத்தில் அவரே ஏற்கெனவே பதிவு செய்திருக்கிறார்.

வெள்ளைமாளிகையில் இஸ்ரேலிய பிரதமருடன் பெப்ரவரியில் நடத்திய சந்திப்பு ஒன்றின்போது " சமாதானப் பரிசைப் பெறுவதற்கு எனக்குத் தகுதி இருக்கிறது. ஆனால், அவர்கள் எனக்கு ஒருபோதும் தரமாட்டார்கள்" என்று கூறினார்.

நோபல் பரிசுகளை தெரிவு செய்யும் ஐவர் கொண்ட கமிட்டியை நோர்வே பாராளுமன்றமே தெரிவு செய்கிறது. தனக்கு அந்த கமிட்டி பரிசைத் தராவிட்டால் ட்ரம்ப் நோர்வே மீது கடுமையான வரிகளை விதித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ●

## வழுமையான...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிவில் சமூகமும் குறிப்பாக சிறுபான்மைச் சமூகங் களைச் சேர்ந்தவர்கள் பயனுறுதியுடைய முறையில் பங்கேற்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். பாரதூரமான குற்றங் களுக்கான சட்ட ரீதியான பொறுப்புக்கூறல் இழப்பீட்டுடனும் துஷ்பிரயோகங்களின் ஆபத்தைக் குறைக்கக் கூடிய சீர்திருத்தங்களுடன் கூடியதாக இருக்க வேண்டும்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்ற மனிதப் புதைகுழிகள் பல்வேறு மோதல்களின்போது இடம்பெற்ற அட்டூழியங்களையும் உண்மையையும் நீதியையும் தொடர்ந்து வேண்டி நிற்கின்ற குடும்பங்களின் நீடித்த வேதனையையும் நினைவூட்டுபவையாக இருக்கின்றன. நாட்டின் தென்பகுதியில் ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி. ) கிளர்ச்சிகளின்போது பாரிய புதைகுழிகளில் புதைக்கப்பட்டவர்களும் இதில் அடங்குவர்.

இலங்கையில் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் மட்டுப்படுத்தப்பட்ட நம்பகத்தன்மையை கொண்டவையாகவும் வெளிப்படைத்தன்மை இல்லாதவையாகவும் தாமதமானவையாகவும் கண்டனம் செய்யப்பட்டது. ஜனாதிபதி திசாநாயக்க உறுதியளித்திருக்கும் சட்டத்தின் முன் சமத்துவமும் தலையிடாமையும் பரந்த ஒரு திட்டத்திற்குள் அடங்கியவையாக இருக்க வேண்டியது அவசியம். குறிப்பாக, ஒரு நேரவரையறை தேவை.

## ஐ.நா. மனித உரிமை...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன அழிப்புக்கான நீதியை மையப் படுத்தி அந்தக் கடிதத்தை தமிழ்த் தேசி யப் பேரவை வரைந்திருக்கவில்லை. அதனாற்தான் அதை இலகுவாகத் தட் டிக்கழிக்க முடிந் துள்ளது. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேசக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலும் நல்லிணக்கமும் என்று தொடங்கிய ஆணையாளரின் அறிக்கையிடல், தற்போது மனித உரிமை நிலைமை என்று குட்டிச் சுவராகியுள்ளது.

கடந்த கால சர்வதேசக் குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் பத் தோடு பதினொன்றாகிவிட்டது. இம் முறை அறிக்கையின் தாக்கம் குறை வடைந்து, ஒட்டுமொத்த இலங்கை மக்களின் மனித உரிமை மீறல் விவகாரம் பற்றியதாகவும் மக்களின் ஜனநாயகப் பாதுகாப்பு என்ற தொனியிலும் அமைந் துள்ளது.

ஆணையாளர் கடந்த யூன் மாதம் இலங்கைக்கு வந்த போது யாழ் செம் மணி மனிதப் புதைகுழியையும் பார்வையிட்டிருந்தார். இதை அறிக்கையில் குறிப்பிட்டபோதும், இதை ஓர் இன அழிப்புக்கான குற்றங்களில் ஒன்றாக அவர் எடுத்தாளவில்லை.

அதேநேரம்-

ஆணையாளர் எதிர்பார்ப்பது போன்று ஐசிசி இல் இலங்கை இணைந் தாலும், 2002 ஆம் ஆண்டுக்கும் 2025 ஆண்டுக்கும் இடையான குற்றங்களை அதன் அடிப்படையில் விசாரிக்க முடியும். எதிர்காலத்தில் நிகழக்கூடிய குற்றங் களைத் தண்டிக்கும் உரிமையை வழங்கு வதாகவே இலங்கை வாக்குறுதி அளிக் கும்.

இதனை நம்பி கடந்தகாலக் குற்றங் களை மறப்போம் மன்னிப்போம் என நல்லிணக்க அடிப்படையில் நீக்கம் செய்து விட்டு இலங்கை ஐசிசி இல் இணைந்த காலத்தில் இருந்து நடை பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றி மாத்திரமே விசாரணைகள் நடை பெறலாம்.

ஆகவே ஈழத்தமிழர்கள் மீண்டும் ஏமாற்றப்படப் போகின்றனர் என்ற முடிவுக்கே வர வேண்டும். தேசிய இனப் பிரச்சினை விவகாரம் கூட பத்தோடு பதினொன்றாகவே மதிப்பிடப்பட்டி ருக்கிறது.

இங்கே கேள்வி என்னவென்றால் -

*1) 2012 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்பட்டு வரும் தீர்மானங் களை இந்த ஆணையாளர் வாசிக்க வில்லையா?*

*2) அல்லது கவனிக்கவில்லையா?*

*3) அல்லது மேற்கு - ஐரோப்பிய நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப பணியாற்றுகிறாரா?*

அரசு அற்ற இனங்களுக்கான நீதி என்பது புவிசார் அரசியல் தேவைகளின் அடிப்படையிலேயே அமைகின்றது என்பதற்கும், தமிழர் பிரதிநிதிகள் இறுதி நேரத்திலும் தமக்குள் முரண்பட்டுக் கொண்டிருப்பது ஆணையாளருக்கு இப் படியான அறிக்கைகளை முன்வைக்க இடமளிக்கிறது என்பதற்கும் இந்த அறிக்கை சிறந்த உதாரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

அறிக்கை, ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்கவின் கீழ், தன்னிச்சையான தடுப்புக்காவல், சித்திரவதை, காவலில் ஏற்பட்ட மரணங்கள் உள்ளிட்ட உரிமை மீறல் சம்பவங்களை விவரிக்கிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ரேர்க்கின் புதிய அறிக்கை, நீதிக்காகப் போராடும் குடும்பங்கள் மற்றும் ஆர்வலர்களை மௌனமாக்குவதற்கு கொடூர மான சட்டங்களைத் தவறாகப் பயன் படுத்துவதையும் விவரிக்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## மன்னார்...

வெளியான செய்திகள் குறித்தும் அமைச்சர் கருத்து தெரிவித்தார்.

எந்தவொரு திட்டத்திற்கும், திரும் பப் பெறக்கூடிய மற்றும் திரும்பப் பெற முடியாத வைப்புத்தொகைகள் உள்ளன என்றும், அதன்படி, என்ன கொடுக்க வேண்டும், என்ன கொடுக்கக் கூடாது என்பதைக் கண்டறிந்து, தேவையானதை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இலங்கையில் திட்டமிடப்பட்ட 1 பில்லியன் டொலர் காற்றாலை மின் திட்டத்திலிருந்து விலக அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் கடந்த பெப்ரவரி மாதம் தீர்மானித்திருந்தது. (அ)

## நம்பிக்கையில்லா...

மக்கள் சார்ந்த தீர்மானங்களையே மேற்கொள்வோம். பாராளுமன்றத்தில் நாங்கள் முறையாக வேலை செய்துள் ளோம்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி களை மீறி அரசாங்கம் செயற்பட வில்லை.

நாங்கள் மக்கள் பக்கம் இருந்தே பணிகளை முன்னெடுக்கின்றோம். மக்களின் நம்பிக்கையே எங்களுக்கு முக்கியம்.

எனவே, இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வருபவர்களே அதன் பலத்தை தெரிந்துக் கொள்வார் கள்.

நாங்கள் அருண ஜயசேகரவை பாதுகாக்கவில்லை. வாய்மையை பாது காப்பதற்காகவே பாடுபடுகிறோம்.

இந்த நம்பிக்கையில்லா தீர்மானத் தில் எதிர்க்கட்சி தோல்வியடைவது உறுதி - என்றார். (அ)

## ஜனாதிபதி...

கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், வேலுசாமி இராதா கிருஷ்ணன், ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷ ாத் பதியுதீன் ஆகியோர் பங்கேற்றனர்.

கூட்டணியின் எதிர்கால அரசியல் திட்டங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இதன்படி, மீண்டுமொரு தேர்தலை எதிர்கொள்வதற்கு முன்னர் பரந்துபட்ட எதிர்க்கட்சி கூட்டணி ஒன்றை உரு வாக்க வேண்டும் எனக் குறித்த பங்காளி கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்திய தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்திக்குள் நிலவுவதாகக் கூறப்படும் முறுகல்கள் தீர்க்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதன்போது கருத்துரைத்த சஜித் பிரேமதாஸ பரந்துபட்ட கூட்டணி அமைக்கப்பட்டாலும் அது தம்முடைய எதிர்க்கட்சி கூட்டணியுடன் இணைந் ததாக இருக்க வேண்டும் என வலியுறுத் தியுள்ளார்.

அத்துடன், மீண்டுமொரு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுமாயின் அப்போ தும், தாமே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க போவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்ட தாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## யாழில்...

மின்சாரம் தாக்கியுள்ளது. இவ்வாறு மின்சாரம் தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இது குறித்து விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (அ-05)

## அரச ஊழியர்...

இந்த மண்டபத்தில் பெண்கள் குறைவு,நான் ஒரு கணக்கெடுப்பு எடுத் தேன் ஆனால் தேவையில்லை என்று நினைத்தேன்.பெண்களின் கண் புருவம் வடிவ மைக்க இப்போது எவ்வளவு செல வாகிறது.கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் எவ்வாறு இருந்தது என்று தெரியாது. ஆனால் இன்று அதிகரிக்கப் பட்டுள்ளது.

உங்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். ஏனென்றால் அதிகரிக்கப் படும் சம்பளப் பணம் அழகுப்படுத்தும் நிலையங்களுக்கு, மதுபானச்சாலை களுக்கு செல்கிறது.

நாட்டில் பணப் புரள்வு நடைபெற வேண்டும். அப்போது தான் பொருளா தாரம் உயர்வடையும்.ஆகையால் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.

தொழிற் சங்க நிகழ்வுகளில் உரையாற்றும் போது பயமாகத்தான் இருக்கிறது. இப்போது நான் அமைச்ச ராக இருக்கிறேன். ஆனால் எனது தொழிற்சங்கத் தலைமைப் பதவி மற்றும் அமைச்சு ஆகிய இரண்டையும் பாது காத்து கொண்டு செல்ல வேண்டியுள் ளது - என்றார். (அ)

## மகிந்தவின்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சந்தர்ப்பத்தில் தனக்கு ஒன்றும் செய்யமுடியாது, தனது கைகள் கட்டுப்பட்டுள்ளன என்றார்.

அதன் பின்னர் 20 ஆவது அரசியல மைப்பு திருத்தச் சட்ட மூலம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றதிகாரம் மீள வழங்கப்பட்டது.

அதை நிறைவேற்றவும் ஒரு வருடம் கடந்தது. குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ அன்று பிரதமர் பதவி வகித்தார். அரசிய லில் ஞானத்தில் கைதேர்ந்தவராக இருந் தார்.

ஆனால் அவரின் சில நிலைப்பாடுகள் கூட நிறைவேறவில்லை. அன்றைய நிலையில் கோட்டாபயவுக்கு நிறைய பேர் உபதேசம் வழங்க இருந்தனர். ஆனால் சரியான அறிவுரைகளை அவர் கேட்கவில்லை.

ஒரு கட்டத்தில் கோட்டாபய வேலை களை செய்ய ஆரம்பித்த போது,அதற்கு எதிராக போராட்டங்களும் எதிர்ப்புக ளும் கிளம்பின. அவர் அரசை மேலாண்மை செய்ய தவறிவிட்டார். மேலாண்மை செய்வதற்கான தளத்தை யாரும் அமைத்துக் கொடுக்கவில்லை- என்றார். (அ)

## சலுகைகளை...

விக்கிரமசிங்க கட்சி செயற்பாட்டா ளர்களுக்கு அறிவித்துள்ளார்.

அத்தகைய உரிமைகளைப் பாது காக்க நீதிமன்றத்திற்குச் செல்ல வேண் டிய அவசியமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், மற்ற முன்னாள் ஜனாதி பதிகள் சட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ள நினைத்தால் அதற்கு தான் ஆதரவு வழங்கப்போவதில்லை எனவும் அவர் கூறினார்.

அத்துடன், இவ்விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கிடையில் எவ்வித பேச்சுவார்த்தைகளும் இடம் பெறவில்லை. ஆனால் திருமண நிகழ்ச்சியொன்றின்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவு டனும், மற்றொரு ஒரு திருமணத்தின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவுடனும், இவ்விடயம் தொடர்பில் கருத்துக்களை வெளிப்படுத்தியதாக அவர் தெரிவித்துள்ளார். (அ)

25 பவுண் நகையை வாங்கி ஏமாற்றிய நண்பி

# தவறான முடிவெடுத்து குடும்பப் பெண் மரணம்

யாழ்ப்பாணம்,ஒக.17

நண்பியிடம் 25 பவுண் நகையை கொடுத்து ஏமாந்த குடும்பப் பெண் ணொருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

பண்டத்தரிப்பு - சில்லாலை பகுதியைச் சேர்ந்த றொபேட் ராஜ்குமார் ஆன் சுகாசினி (வயது 43) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்தார். இது குறித்து மேலும் தெரிய வருகையில்,

குறித்த பெண்ணின் சினேகிதி ஒருவர் தனது மகனின் திருமணத்திற்கு செலவ ழிப்பதற்கு பணம் தேவைப்படுவதால் அடகு வைப்பதற்கு என 25 பவுண் நகையை குறித்த பெண்ணிடம் வாங்கி யுள்ளார். இருப்பினும் அவர் அந்த நகையை திருப்பி கொடுக்காமல் தொடர்ச்சியாக குறித்த பெண்ணை ஏமாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினமும் அந்த நகையை நண்பியிடம் கேட்டுள் ளார். அவர் அந்த நகையை வழங்க மறுக்க மனவிரக்தியில் நேற்று அதி காலை தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர் மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசார ணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். இளவாலை பொலி ஸார் சாட்சிகளை நெறிப்படுத்தினர். (அ-05)

## அரச அலுவலர்களில்...

வேதநாயகன் தெரிவித்தார்.

பெண் சாதனையாளர்களுக்கான அரியாத்தை விருது வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பண்டாரவன்னியன் மாநாட்டு மண்ட பத்தில் நேற்று சனிக்கிழமை காலை முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

ஆளுநர் தனது உரையில், எங்களால் செய்ய முடியாததென்று எதுவுமில்லை. மனமிருந்தால் எதையும் செய்யலாம். செய்து முடிக்கலாம். ஆனால் எங்களில் பலருக்கு மனமும் வருவதில்லை. அதற் கான துணிவும் வருவதில்லை. இந்தச் சாதனைப் பெண்கள் அதனை மாற்றி மைத்திருக்கின்றார்கள். இந்தப் பெண்க ளைப்போன்று ஒவ்வொரு ஊரிலும் இருந்தால் அந்த ஊர் தன்னாலேயே அபிவிருத்தியடைந்துவிடும்.

தலைமைத்துவத்தில்தான் எல்லாம் தங்கியிருக்கின்றது என்பது தொடர்பில் பல தடவைகள் நான் குறிப்பிட்டிருக்கின் றேன். எங்கு தலைமைத்துவம் தவறுகின் றதோ அந்த நிறுவனம் சரிவை நோக்கி பயணிக்கின்றது.

நேர்மையாக இருந்தால் எதற்கும் பயப்பிடத்தேவையில்லை. நேர்மை யானவர்களை நோக்கித்தான் விமர்சனங் களும் வரும். சமூக ஊடகங்களில் வரும் விமர்சனங்களுக்கு அஞ்சத் தேவை யில்லை. இன்று பலர் நேர்மையற்ற வர்களாக இருப்பதால் அவர்கள் ஒன்று சேர்ந்து நேர்மையானவர்கள் மீது சேற டிக்கின்றார்கள். நேர்மையாக இருப்ப வர்கள் இவற்றுக்கு அஞ்சுவதோ, கவ லைப்படுவதோ, கவனத்திலெடுப்பதோ தேவையற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் மிகச் சிறந்த நிர்வாகி. அவர் புத்தாக் கமாகச் சிந்தித்து இவ்வாறானதொரு விருது வழங்கலை நடத்துகின்றார். முல்லைத்தீவு மாவட்டத்துக்கு சகல வளமும் இருக்கின்றது. ஆனால் வறுமை யிலும் முதல் மாவட்டமாக இருக்கின் றது. எங்கள் அதிகாரிகள் கவனமெடுத் தால் இதை மாற்றியமைக் கலாம். தற்போதுள்ள அரசாங்கத்தின் காலத்தில் எமக்கான அபிவிருத்திகளை நாம் முன்னெடுப்பது இலகுவாக இருக்கும்.

இந்த மாவட்டம் உள்ளிட்ட வடக் கில் 4 மாவட்டங்களில் மாவட்ட செய லராகப் பணியாற்றியிருக்கின்றேன். அப்போது சில அபிவிருத்திகளை என் னால் செய்ய முடியாமல் இருந்தது. எமது மாகாணத்தை அபிவிருத்தி செய்வ தற்காக ஆளுநர் பதவியை ஏற்றுக் கொண்டேன். கதிரையில் சும்மா இருந்துவிட்டுச் செல்வதற்கு நான் வர வில்லை. அன்று மாவட்டச் செயலராக இருந்தபோது செய்ய முடியாத சில அபிவிருத்திகள் இப்போது இந்த மாவட்டத்தில் செய்வதற்கு ஏதுவாகி வருகின்றன. இந்த முல்லைத்தீவு மாவட் டம் இன்னும் 10 ஆண்டுகளுக்கு அபி விருத்தியில் முழுமையடை மாவட்ட மாக பரிணமிக்கும் என்ற தளராத நம்பிக்கை எனக்கிருக்கின்றது - என் றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந் தினராகவும், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் கௌரவ விருந்தினராகவும், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் மற்றும் கிறிசலிஸ் தலைமை நிர்வாக அதிகாரி திருமதி அஷ்கா குணசேன ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

2025ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் அரியாத்தை விருதை முள்ளியவளையைச் சேர்ந்த எஸ்.அகிலத் திருநாயகியும், சிறந்த பெண் தலை மைத்துவத்துக்கான அரியாத்தை விருதை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த திருமதி மைக்கல் தியாகராஜா ஜூவ ராணி புனிதாவும், சிறந்த பெண் தொழில்முனைவோருக்கான அரி யாத்தை விருதை துணுக்காயைச் சேர்ந்த திருமதி சத்தியானந்தம் சோபனாவும், சிறந்த பெண் சமூகசேவகருக்கான அரியாத்தை விருதை மாந்தை கிழக்கைச் சேர்ந்த திருமதி விக்னேஸ்வரன் ஜெக தாம்பிகையும், சிறந்த பெண் மாற்றத்தை ஏற்படுத்துவோருக்கான அரியாத்தை விருதை வெலிஓயாவைச் சேர்ந்த திருமதி விமலசேனவும், சிறந்த இளம்பெண் தொழில்முனைவோருக்கான அரி யாத்தை விருதை ஒட்டுசுட்டானைச் சேர்ந்த திருமதி கிருசாந் மிதுசாவும் பெற்றுக்கொண்டனர். (அ)

## பாதிக்கும்...


தரவுகளின் பிரகாரம், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.9 சதவீதம் அல்லது அரசாங்க வருவாயில் கிட்டத் தட்ட 60 சதவீதம், அரசாங்கக் கடனுக் கான வட்டி செலுத்துதல்களைச் செலுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

"சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.83 மற்றும் 1.88 சதவீத ஒதுக்கீட்டைப் பெற் றன. இது முந்தைய ஆண்டை விட அதி கரிப்பை பிரதிபலிக்கிறது. மேலும் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வாக்கு றுதியான முறையே மூன்று மற்றும் ஆறு சதவீத ஒதுக்கீட்டை நோக்கி நகர்கிறது - என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## திடீரென தீ பற்றியது பஸ்!



யாழ்ப்பாணம், ஒக. 17

யாழ்ப்பாணத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் ஒன்று நேற்று சனிக்கிழமை திடீரென தீப் பற்றி எரிந்துள்ளது.

நல்லூர் - கிட்டு பூங்கா பகுதியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த பேருந்திலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள் ளது.

பேருந்தில் தீ பற்றியதைத் தொடர்ந்து யாழ். மாநகர சபையின் தீயணைப்பு படையினர் விரைந்து சென்று தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் வெளியாக வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-3)

## சுற்றுலா பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

கொழும்பு, ஒக. 17

ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை 15.6 சதவீதமாக அதிகரித்துள்ள தாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள் ளது.

இதன்படி, இந்த மாதம் முதல் 13 நாட்களில் 99,406 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு பிரவேசித்துள்ளதாக வும் அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. நாட்டை வந்தடைந்தவர்களில் பெரும்பாலானோர் இந்திய பிரஜைகளாவர்

அத்துடன், பிரித்தானியா மற்றும் இத்தாலியிலி ருந்தும் பெருமளவிலான சுற்றுலா பயணிகள் நாட்டுக் குள் பிரவேசித்துள்ளனர்.

நாட்டிற்கு பிரவேசிக்கும் சுற்றுலா பயணிகள், எல்ல, நுவரெலியா, கண்டி, அநுராதப்புரம், யாழ்ப்பாணம், சிகி ரியா போன்ற பகுதிகளுக்கு விஜயம் செய்கின்றனர். (அ)

## 20 வீத பொறியியலாளர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றம்!

கொழும்பு, ஒக. 17

கடந்த சில ஆண்டுகளாக இலங்கை மின்சார சபை யின் பொறியியலாளர்களில் சுமார் 20 வீதமானோர் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

அதன்படி கடந்த 3 ஆண்டுகளில் இலங்கை மின்சார சபையின் 226 பொறியியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக அதன் ஊடக பேச்சாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் அயர்லாந்து உள்ளிட்ட நாடுகளின் தொழில் வாய்ப்புகளுக்காக அவர்கள் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புள்ளிவிவரங்களின்படி, இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கையானது இலங்கை மின்சார சபையின் மொத்த பொறியியலாளர்களில் 20 வீதமாகும். அவர்களில் 85 வீதமானோர் மின்சார பொறி யியலாளர்களாவர்.

அத்துடன் 8 வீதமானோர் இயந்திர பொறியியலா ளர்கள் என்றும் 7 வீதமானோர் சிவில் பொறியியலா ளர்கள் என்றும் கூறப்படுகிறது.

மின்சார பாவணையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக கூறுகையில்-

உள்ளக பொறியியலாளர்கள் ஏற்கனவே உள்ள நிலை யில், 60 புதிய பொறியியலாளர்களை நியமிக்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த புதிய ஆட்சேர்ப்பானது, ஆட்சேர்ப்பு நடை முறையை மீறும் செயலாகும் - என்றார். (அ)

# எதிரணிகளை ஒன்றிணைப்பதானது ஆட்சியை கவிழ்க்கும் சூழ்ச்சி அல்ல!

### கூறுகிறார் மனோ கணேசன்



கொழும்பு, ஒக. 17

**"எதிரணிகளை ஒன்றிணைப்பதானது ஆட்சியைக் கவிழ்ப்பதற் குரிய சூழ்ச்சி அல்ல. இந்த அரசாங்கம் ஐந்து வருடங்களுக்கு பதவியில் இருக்க வேண்டும்."- என்று தமிழ் முற்போக்கு கூட்ட ணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

எதிரணிகளை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளின் தலை வர்கள் மற்றும் பிரதிநிதிகள் முன் னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸின் வீட்டில் வியாழன் இரவு சந்திப்பு நடத்தினர்.

மேற்படி சந்திப்பு குறித்து ஊட கங்களிடம் கருத்து வெளியிடுகையி லேயே மனோ கணேசன் இவ்வாறு கூறினார்.

"இது எதிரணி கூட்டணி அல்ல. எதிரணிகளை ஒன்றிணைப்பதற்கு ரிய பொது மேடையை அமைக்கும் முயற்சியாகும். ஜீ.எல்.பீரிஸ் தலை வர் அல்லர். இப்பணியை முன்னெ டுப்பதற்குரிய ஏற்பாட்டாளர் அவர். விரைவில் எதிர்க்கட்சி தலை வரையும் சந்திக்கவுள்ளோம்.

ஆட்சி கவிழ்ப்பு சூழ்ச்சி நடப் பதாக ஜனாதிபதி குறிப்பிடுகின் றார். நாம் அவ்வாறு சூழ்ச்சி செய்ய வில்லை. இந்த அரசாங்கம் ஐந்து வருடங்கள் இருக்க வேண்டும். அதன்பின்னர் தேர்தல் நடத்தி மக் கள் ஆணை வழங்கினால் பதவியில் மீண்டும் இருக்கலாம். தேர்தல் மூலம் மாத்திரமே நாம் ஆட்சி மாற் றத்தை ஏற்படுத்த முற்படுவோம்."- என்றார் மனோ.

(அ)

# வடக்கில் மூலைமுடுக்கெல்லாம் இராணுவ முகாம்! ஹர்த்தால் மூலம் எங்கள் எதிர்ப்பை காட்டுவோம்!!

### வவுனியா மாநகர முதல்வர் தெரிவிப்பு

வவுனியா, ஒக. 17

வடக்கில் எங்கு பார்த்தாலும் இராணுவ முகாமை அவதானிக்கும் நிலையில் தெற்கின் நிலைமை வேறு வித மாக உள்ளது. எனவே அதிகப்படியான இராணுவப் பிர சன்னத்தை குறைக்க வலியுறுத்தி எதிர்வரும் ஹர்த்தால் போராட்டத் துக்கு முழுமையான ஆதரவை வழங்குவ தாக வவுனியா மாநகர சபை முதல்வர் சு.காண்டீபன் தெரி வித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஹர்த் தால் போராட்டத்துக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குகின்றோம். நாட்டில் உள்ள ஏனைய ஏழு மாகா ணங்களை விட வடக்கு - கிழக்கில் இராணுவ பிரசன் னம் அதிகமாக இருக்கிறது.

எனவே வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவத்தை குறைத்து அனைத்து மாகாணங்களுக்கும் சமமான அளவில் பங்கிடப்பட வேண்டும். எமது மக்களின் காணி களை இராணுவம் விடுவிக்க வேண்டும்.

தற்போதுகூட வவுனியா விமானப்படை முகாமுக் காக சகாயமாதா புரத்துக்கு பின்புறமுள்ள 8 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது. ஆனால் அந்த கிராமத் தில் விளை யாட்டு மைதானம் ஒன்றுகூட இல்லை. இறம்பைக்குளம் கிராமத்தில் பொதுத்தேவைக்கான காணி இல்லை. அந்தபகுதியில் உள்ள மயானத்துக்கான நிலம் போதுமானதாக இல்லை.

எனவே இப்படியான ஒரு நிலை இருக்கும்போது இந்த காணி சுவீகரிப்பை எப்படி அனுமதிக்க முடியும்.

எமது பகுதிகளில் கிராமங்க ளுக்கு ஒரு இராணுவ முகாம் ஒன்று கட்டாயம் இருக்கும் நிலை உள்ளது. ஆனால் தெற்கில் அவ்வாறு இல்லை. எனவே இவ்வா றான நிலைமைகள் மாற்றப்படவேண்டும் என வலியு றுத்தி நாம் இந்த ஹர்த் தாலுக்கு முழுமையான ஆதர வினை வழங்குகின்றோம். - என்றார்.

(அ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசாங்கத்தைப் பலப்படுத்தும்!

### சுட்டிக்காட்டுகிறார் திலித் ஜயவீர

கொழும்பு, ஒக. 17

"அரசாங்கத்துக்குள் பிளவு ஏற்பட்டுள்ள நிலையில், நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பது அர சாங்கத்தை பலப்படுத்துவதாகவே அமையும். எனவே, பிரதான எதிர்க்கட்சி பொறுப்புடன் செயற்பட வேண் டும்."

- இவ்வாறு சர்வஜன அதிகாரத்தின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வரு மாறு-

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர, கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக இருந்த காலப் பகுதியில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு சம்பவத்தை மையப்படுத்தியே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின்னணி யில் சூழ்ச்சி இல்லை, பிரதான சூத்திரதாரி இல்லை என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம்.

பிரதி பாதுகாப்பு அமைச்சராக செயற்பட்ட காலத் தில் அல்ல, இராணுவத்தில் அவர் செயற்பட்ட காலப் பகுதியை மையப்படுத்தியதாக பிரேரணை வருவதால் அது ஒட்டுமொத்த இராணுவத்தின் புகழுக்கு களங்கம் ஏற்படும்.

அதேவேளை, அரசாங்கத்துக்குள் பிளவு உள்ளது என்ற கருத்து நிலவுகின்றது. இந்நிலை அவ்வாறு இல்லை என்பதை இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை உறுதிப்படுத்திவிடும். ஆளுங்கட்சியின் இணைந்து அதனை தோற்கடித்துவிடுவார்கள் - என்றார். (அ)

## அதிகாரிகளை மிரட்டி - தாக்கி பொலிஸ் நிலையத்தில் ரகளை

### முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கைது

கொழும்பு, ஒக. 17

மதுபோதையில் காரை செலுத்திய சாரதி ஒருவரை கைது செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொலிஸ் அதிகாரிகளை மிரட்டி தாக்குதல் நடத்திய குற்றச்சாட் டில் சீதாவாக்கை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பி னர் ஒருவர் பாதுக்கை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதுக்கை பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஓட்டோ - கார் மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்துக்குள்ளான காரின் சாரதி மதுபோதையில் இருந்ததால் பாதுக்கை பொலிஸார், கார் சாரதியை கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்ற னர்.

பின்னர் பாதுக்கை பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்த சீதாவாக்கை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் மதுபோதையில் காரை செலுத்திய சாரதியை கைதுசெய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொலிஸ் அதிகாரிகளை மிரட்டி தாக்குதல் நடத்தி யுள்ளார்.

தாக்குதலில் பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி ஒருவர் காயமடைந்து ஹோமாகம ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சீதாவாக்கை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org